Registered as a NewsPaper

விலை ரூபா:-10

# ஈழநாதம்
மக்கள் நாளிதழ்

பக்கங்கள்-14

நாதம் 16 | திருவள்ளுவர் ஆண்டு 2036 | புரட்டாதி-09 | 25-09-2005 | ஞாயிற்றுக்கிழமை | ஓசை-220




S.M கோல்ட் ஹவுஸ்
வவுனியா நகரில் அசல் 22 கரட் தங்க நகைகளை உங்கள் விருப்பத்திற்கேற்ப தெரிவு செய்து பெற்றுக்கொள்ள
S.M கோல்ட் ஹவுஸ்
இல:-46A, தர்மலிங்கம் வீதி, வவுனியா.
உரிமையாளர்:- S.M.சண்முகரத்தினம்.
T.P: 024-222 4247 (சி-12761)

# சிவில் நிர்வாகத்தில் இராணுவத்தினரின் தலையீடு அப்பட்டமான போர்நிறுத்த மீறலாகும்!

## ஹொக்லண்ட் உடனான சந்திப்பின்போது யாழ். மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் குற்றச்சாட்டு

(பளை)

*மீண்டும் பாஸ் கெடுபிடிகளைப் படையினர் அதிகரித்து வருகின்றமையும், சிவில் நிர்வாக நடவடிக்கையில் தலையீடு செய்து வருகின்றமையும், யுத்தநிறுத்த உடன்பாட்டினை அப்பட்டமாக மீறும் செயல் என யாழ். மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் இளம்பரிதி போர் நிறுத் தக் கண்காணிப்புக் குழுத் தலைவர் ஹொக்லண்ட் உடனான சந்திப்பின் போது தெரிவித்தார்.*



(27)

மாவட்டமட்டத்தில் பேச்சு வார்த்தை மேசையில் எடுக்கப்பட்ட எந்தவொரு முடிவையும் அமுல் படுத்தும் வகையில் சிறிலங்காப் படைகள் செயற்படவில்லை. அத்துடன் எம்மால் முன்வைக்கப்பட்ட கோரிக்கைகள் எதனையும் நிறைவேற்ற முன்வராத படைத்தரப்பு அதற்கு நேர் எதிராகவே செயற்பட்டு வந்தது. அத்துடன் படையினரின் கட்டுப்பாட்டுப் பகுதியில் அரசியல் பணிகளில் ஈடுபடும் போராளிகளிற்கான இடையூறுகள் மற்றும் பாதுகாப்புத் தொடர்பில் எழுந்த உறுதியற்ற தன்மையினையடுத்தே போராளி களை தமது கட்டுப்பாட்டுப் பகுதிக்கு அழைத்து வந்துவிட்டதாக யாழ். மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் சி.இளம்பரிதி தெரிவித்துள்ளார்.

(02 ஆம் பக்கம் பார்க்க)

## வீரவணக்கம்

சுகயீனம் காரணமாக நேற்றுப் போராளி ஒருவர் சாவடைந்துள்ளார். லெப்.கேணல் பிறைபாளன்/சுட்டா (ஜகின்- சில்வஸ்ரர் 8ஆம் வட்டாரம், சாம்பல்தீவு, திருகோணமலை தமு. 1ஆம் வட்டாரம் கைவேலி புதுக்குடியிருப்பு)என்ற போராளியே சாவடைந்தவராவார்.

இவருக்கு தமிழீழ விடுதலைப் புலிகள் வீரவணக்கம் செலுத்துகின்றனர்.

## சுனாமி நிதியில் 13.5 வீதம் மட்டுமே மீளமைப்புப் பணிக்குப் பயன்பாடு

### அரசின் பாரிய நிதி மோசடி அம்பலம்

ஆழிப்பேரலை மீளமைப்புக்கான சர்வதேச நிதியைப் பயன்படுத்துவதில் சிறிலங்கா அரசாங்கம் பாரிய மோசடிகளில் ஈடுபட்டிருப்பதை சிறிலங்காவின் கணக்குத் தணிக்கைத்துறை அம்பலப்படுத்தியுள்ளது.

மொத்த சர்வதேச நிதியில் 13.5 விழுக்காடு மட்டும் தான் முக்கிய துறைகளின் மீளமைப்புப் பணிகளுக்குப் பயன்படுத்தப்பட்டிருப்பதாகவும், அந்த அறிக்கை கூறுகிறது.

ஆழிப்பேரலை அனர்த்தம் நடந்த டிசம்பர் 26 ஆம் திகதி முதல் யூன் 30 ஆம் திகதி வரையிலான சேத மதிப்பீடு மற்றும் கட்டுமான விபரங்களை உள்ளடக்கிய இடைக்கால அறிக்கையை கணக்குத் தணிக்கைத் துறை பாராளுமன்றத்தில் தாக்கல் செய்துள்ளது.

உள்ளூர் மற்றும் சர்வதேச நிதி மேலாண்மையில் முறைகேடுகள், ஆழிப்பேரலை நிவாரணப் பொருட்களை உள் நாட்டுக்குள் அனுப்புவதில், விமான நிலையம் மற்றும் துறைமுகங்களில்

(14ஆம் பக்கம் பார்க்க)

## மட்டக்களப்பில்இளைஞன் இனந்தெரியாதோரால் சுட்டுக்கொலை

மட்டக்களப்பில் நேற்றிரவு 7.45 மணியளவில் இனந்தெரியாத ஆயுதக் குழுவினரால் இளைஞர் ஒருவர் சுட்டுக்கொல்லப்பட்டுள்ளார்.. மட்டக்களப்பு அந்தோனியார் வீதியில் அமைந்துள்ள "ஆராதனா" தையல் கடை உரிமையாளரே சுட்டுக்கொல்லப்பட்டவராவார்.

இவர் தனது கடையில் வேலை செய்து கொண்டிருந்த வேளையிலேயே கடையில் வைத்து சுட்டுக்கொல்லப்பட்டுள்ளார். (14ஆம் பக்கம் பார்க்க)

## உருவப்படம் இணைப்பு



நாளை கேணல் சங்கர் (முகிலன்) அவர்களின் நான்காவது ஆண்டு நினைவு நாளை முன்னிட்டு அவரின் வர்ணப்படம் இன்றைய ஈழநாதம் நாளேட்டுடன் இணைக் கப்பட்டுள்ளது.

## மன்னார் தேசிய எழுச்சிப் பிரகடன மாநாட்டுக்கான ஏற்பாடுகள் தீவிரம்

(அலுவலக செய்தியாளர்)

வவுனியா தேசிய எழுச்சி பிரகடனத்தை வலியுறுத்தும் முகமாக வரும் புதன்கிழமை மன்னார் பொது விளையாட்டு மைதானத்தில் அனைத்து மக்களும் கூடி பிரகடனம் செய்யவுள்ளனர்.

மன்னார் மாவட்ட தேசிய எழுச்சிப் பிரகடனத்திற்கான செயலணிக்குழு அந்தந்தப் பிரதேசங்களின் தன்மைக்கேற்ற வகையில் ஒழுங்குபடுத்தப்பட்டு அந்த செயலணிக்குழுக்கள் பிரதேச மட்டத்தில் உள்ள மக்களை

(14ஆம்பக்கம் பார்க்க)

## ஏறாவூர் தன்னா முனைப்பகுதியில் படையினர் சுற்றிவளைப்புத் தேடுதல்

ஏறாவூர் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட தன்னாமுனைப் பகுதியில் நேற்று சிறிலங்கா படையினர் மற்றும் பொலிசார் இணைந்து சுற்றி வளைப்புத் தேடுதல் ஒன்றை மேற்கொண்ட தாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

அதிகாலை முதல் நண்பகல் வரை இடம்பெற்ற சுற்றிவளைப்புத் தேடுதலில் எவரும் கைது செய்யப்படவில்லையென ஏறாவூர் பொலிசார் தெரிவித்துள்ளனர்.

## மன்னார் மாவட்ட மக்களுக்கான தற்காப்புப் பயிற்சிகள் ஆரம்பம்

(அலுவலக செய்தியாளர்)

தியாக தீபம் திலீபனின் நினைவு நாளை முன்னிட்டு மன்னார் மக்களுக்கான தற்பாதுகாப்பு பயிற்சி ஆரம்பிக்கப்பட்டுள்ளது. மக்கள்

(14ஆம் பக்கம் பார்க்க)



(படம்-தீபன்)

## வடமராட்சியில் தமிழீழக் கடற்படை துணைப்படையின் தற்காப்பு ஒத்திகை

தமிழீழக் கடற்படை துணைப்படையின் தற்காப்பு ஒத்திகைநேற்று வடமராட்சி கிழக்கில் நடைபெற்றது.சிறப்புப் பயிற்சி ஆசிரியர் பூவண்ணன் ஒழுங்கமைப்பில் பெருமளவிலான துணைப்

(14ஆம் பக்கம் பார்க்க)





**மக்கள் புரட்சி வெடிக்கட்டும். அது நிச்சயமாகத் தமிழீழத்தை எமது இறப்பின் மூலம் பெற்றுத்தரும். இதனை வானத்திலிருந்து வீரச்சாவடைந்த ஏனைய மாவீரர்களுடன் சேர்ந்து நானும் பார்த்து மகிழ்வேன்.**

— தியாகி லெப்.கேணல் திலீபன்

# தியாகி லெப். கேணல் திலீபன் நினைவாக உண்ணாவிரத நிகழ்வுகள் உணர்வுபூர்வ ஆரம்பம்

(நமது செய்தியாளர்)

தியாகி லெப். கேணல் திலீபன் நினைவு அடையாள உண்ணாவிரத நிகழ்வுகள் நேற்றுக் காலை உணர்வுபூர்வமாக ஆரம்பமாகின. பிரதேச ரீதியாக இவ் உண்ணாவிரத நிகழ்வுகள் இடம்பெற்றன. இந்நிகழ்வுகளில் பெருமளவான மக்கள் பங்கேற்று தியாகி திலீபனை நினைவு கூர்ந்தனர்.

தியாக தீபம் லெப். கேணல் திலீபன் அவர்களின் 18ஆம் ஆண்டு நினைவு தின இறுதி மூன்று நாட்களின் முதலாவது நாள் உண்ணாநோன்பு நிகழ்வு நேற்று கிளிநொச்சியில் உணர்வுபூர்வமாக இடம்பெற்றது.

கிளிநொச்சி கரைச்சிப் பிரதேச சபை வளாகத்தில் அமைக்கப்பெற்ற விசேட பந்தலில் கிளி. மாவட்ட தேசிய எழுச்சிப் பேரவை பொருளாளர். ஏ.வி.கே. மாணிக்கம் தலைமையில் நடைபெற்ற மேற்படி நிகழ்வில் பொதுச்சுடரேற்றலினைத் தொடர்ந்து தமிழீழத் தேசியக் கொடியினை கிளிநொச்சி மாவட்ட தமிழீழ மகளிர் அரசியல்துறைப் பொறுப்பாளர் பூவிழி ஏற்றிவைக்க, தியாக தீபம் லெப். கேணல் திலீபனின் திருவுருவப்படத்திற்கு ஈகச்சுடரேற்றி மலர் மாலை அணிவித்து மலரஞ்சலி இடம்பெற்றது.

அதனைத் தொடர்ந்து விசேடமாக அமைக்கப்பட்ட பந்தலில் உண்ணாவிரத நிகழ்வு ஆரம்பமாகியது.

தலைமையுரையினைத் தொடர்ந்து நினைவுரையினை அரசியல் ஆய்வாளர் திருநாவுக்கரசு, கிளி. மாவட்ட தேசிய எழுச்சிப் பேரவைச் செயலாளர் நா. வேலாயுதம், தமிழீழ மாவீரர் பணிமனைப் பொறுப்பாளர் பொன். தியாகம் ஆகியோர் வழங்கினர். தொடர்ந்து சிறுவர்களின் கவிதை, நினைவுரை என்பன இடம்பெற்றன.

விசுவமடு பிரதேசத்தில் றெட்பனா சந்தியில் விசேடமாக அமைக்கப்பட்ட பந்தலில் நேற்று மாணிக்கபுரம் கமக்காரர் அமைப்புத் தலைவர் தலைமையில் உண்ணாவிரத நிகழ்வு நடைபெற்றது.

பொதுச்சுடரினை மாணிக்கபுரம் கிராம சேவையாளர்கள சுந்தரலிங்கம் ஏற்றினார். தமிழீழத் தேசியக் கொடியை விசுவமடு பிரதேச அரசி யல்துறைப் பொறுப்பாளர் சோழநிலவன் ஏற்றி வைத்தார். தொடர்ந்து திலீபனின் திருவுருவப் படத்திற்கு ஈகச்சுடர் ஏற்றி மலர் மாலை அணிவிக்கப்பட்டது. அதனைத் தொடர்ந்து அடையாள உண்ணாவிரத நிகழ்வு ஆரம்ப மானது. நினைவுரைகளை மாணிக்கபுரம் கிராம சேவகர், றெட்பானா பாரதி வித்தியாலய அதிபர், விசுவமடு உடையார்கட்டு தேசிய எழுச்சிப் பேரவைச் செயலாளர்கள் நிகழ்த்தினர்.

முல்லைத்தீவு பிரதேச நிகழ்வு நகர்ப்பகுதியில் முல்லை வர்த்தக சங்கத்தலைவர் மனோ தலைமையில் ஆரம்பமானது.

இந்நிகழ்வில் பொதுச்சுடரினை கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்க சமாசக் கணக்காளர் ஏற்றினார். தமிழீழத் தேசியக் கொடியினை கடற்புலிகளின் முல்லை மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் ரங்கன் ஏற்றினார். திலீபனின் திருவுருவப்படத்திற்கான ஈகச்சுடரினை மூன்று மாவீரர்களின் தந்தையாரான சிவகுரு ஏற்றினார்.

நினைவுரைகளை கடற்றொழிலாளர் சங்க பொதுமுகாமையாளர் சிவலிங்கம், முல்லை மாவட்ட கடற்புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் ரங்கன் ஆகியோர் நிகழ்த்தினர்.

பூநகரி சாமிப்புலத்தில் திலீபன் மருத்துவமனை நிர்வாகக் குழுத் தலைவர் தலைமையில் 9.45 மணிக்கு நிகழ்வுகள் ஆரம்பமாகின. இந்நிகழ்வின் பொதுச்சுடரினை ஆலங்கேணி, நல்லூர் கிராம அலுவலர்களான சின்ராசா உலகநாதன் ஆகியோர் ஏற்றி வைத்தனர். தமிழீழத் தேசியக் கொடியை பூநகரி திலீபன் மருத்துவமனைப் பொறுப்பாளர் பூரணி ஏற்றிவைத்தார். நிகழ்வில் சிறப்புரையினை பூநகரி அரசியல்துறைப் பொறுப்பாளர் ஈகைவேந்தன் நிகழ்த்தினார். (சோ,14,20)

## தியாகி திலீபன் நினைவாக கவிதை, பேச்சுப் போட்டிகள்

தியாக தீபம் லெப். கேணல் திலீபன் அவர்களின் 18 ஆம் ஆண்டு நினைவு தினத்தை முன்னிட்டு தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தின் அனைத்துப் பணியாளர்களுக்குமிடையில் பேச்சு, கவிதை ஆகிய போட்டிகள் நேற்று முன்தினம் நிறுவன நடுவப்பணியகத்தில் நடாத்தப்பட்டன.

இதில் பேச்சுப் போட்டியில் முதலாம் இடத்தினை செல்வி க.மேகலோஜினி,இரண்டாம் இடத்தினை செல்வி சி.விமலேஸ்வரி, மூன்றாம் இடத்தினை மு.அந்தோனிமுத்து ஆகியோரும் கவிதைப்போட்டியில் முதலாம் இடத்தினை செல்வி சு.சுகிர்தரூபி, இரண்டாம் இடத்தினை செல்வி ந.இந்துமதி, மூன்றாம் இடத்தினை செல்வி இ.அஜந்தா ஆகியோரும் பெற்றனர். இந்த நிகழ்வினை வட்டக்கச்சி இராமநாதபுரம் மேற்கு அரசினர் வித்தியாலய ஆசிரியர்கள் நடுவர்களாக இருந்து திறம்பட நடாத்தியமை குறிப்பிடத்தக்கது.

## நல்லூர் உற்சவகாலத்தில் கண்டெடுக்கப்பட்ட பொருட்கள்

நிறைவு பெற்ற நல்லைக் கந்தனின் உற்சவ காலங்களில் அடியார்களால் கண்டெடுக்கப்பட்டு உற்சவகாலப் பணிமனையில் ஒப்படைக்கப்பட்ட கைக்கடிகாரங்கள்,உந்துருளி, துவிச்சக்கரவண்டித்திறப்புக்கள், வீட்டுத்திறப்புக்கள்,காற்சங்கிலி மாற்றும் கீழ்க் காணும் அடையாள அட்டைகள் போன்றவற்றை நல்லூர் இந்துவிடுதியிலுள்ள மாநகரசபையின் சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகத்தில் அலுவலக நேரங்களில் தகுந்த ஆதாரங்களைக்காட்டிப் பொற்றுக்கொள்ளலாம்.

680340293வீ-இ.தவராஜ்,கச்சேரி ஒழுங்கை , 091201717ஈ - நகுலேஸ்வரன் சந்திரவதனி,2ஆம் வட்டாரம், எழுவைதீவு-ஜே.39. 565221914வீ-இரத்தினசிங்கம் அன்னலெட்சுமி,சின்னடம்பன் ,நெடுங்கேணி. 537846747வீ-புஸ்பலட்சுமி எட்வட்ஜோன் ,கலடியன் வீதி,பெரிய கல்லாறு மேற்கு. 0908028372-சுப்பிரமணியம் ஆர்த்தியான்,கந்தமுருகேசனார் வீதி, புலோலி தெற்கு. ஆறுமுகம் விசுவலிங்கம்,பள்ளமடு. 0064-வி.பிரசன்னா, பூந்தோட்டம் நலன்புரிநிலையம். 091202572- கந்தசாமி சரஸ்வதி,6ஆம் வட்டாரம், வேலணை தெற்கு,ஜே/17. 860363372வீ-விசுவலிங்கம் பிரசன்னா,4 1/04,மானிப்பாய். 342930255வீ-கணபதி தம்பிஐயா, பத்தமேனி,வலி, கிழக்கு. உந்துருளி அனுமதிபத்திரம் 2005. என்.பீ.ஜீ.கியூ. 2240 - கே.கிருஸ்ணகுமாரி உரும்பிராய். டபிள்யூ.ஜீ.1472-எஸ்.ரீ.கோபாலசிங்கம், மட்டக்களப்பு. ஏ.366425-ரி.கெஸ்தொன், 361562867வீ.

## வவுனியா, கொழும்பில் இரு தமிழர்கள் கைது

கொழும்பிலும் வவுனியாவிலுமாக இரண்டு தமிழர்கள் சந்தேகத்தின் பேரில் சிறிலங்கா விமானப் படையினராலும் பொலிசாராலும் கடந்த வியாழக்கிழமை கைது செய்யப்பட்டுள்ளனர்.

வவுனியா விமானப்படைத் தளத்திற்கு அண்மித்த பகுதியில சந்தேகத்திற்குரிய வகையில் நடமாடினார் என்று குற்றம் சுமத்தப் பட்டுவவுனியா புதுக்குளத்தைச் சேர்ந்த எஸ்.அருள்வாசம் (வயது-36) கைது செய்யப்பட்டார். இவர் வவுனியா பொலிசாரிடம் மேலதிக விசாரணைகளுக்காக ஒப்படைக் கப்பட்டார். கொழும்பிலுள்ள பாதுகாப்பு அமைச்சிற்கு அண்மித்த பகுதியில் இதே குற்றச்சாட்டின் பேரில் முல்லைத்தீவு கற்குழியைச் சேர்ந்த சரவணை விஜிதரன் (வயது-21) என்பவரும் கைது செய்யப் பட்டுள்ளார். இவர் பின்னர் பொலிசாரிடம் ஒப்படைக்கப்பட்டார்.

## வடமராட்சியில் மீனவர் மீது சிறில. இராணுவத்தினர் தாக்குதல்

### குறித்த நேரத்திற்கு முன்னரே திரும்பினாராம்

வடமராட்சியில் கடலுக்கு மீன் பிடிக்கச் சென்று திரும்பிய ஒரு மீனவர் குழு கடற்கரைப் பகுதி சோதனைச் சாவடி இராணுவத் தினரால் தாக்கப்பட்டுள்ளது. இது பற்றித் தெரியவருவதாவது, நேற்று முன்தினம் இன்பருட்டி, பொலிகண்டி, பருத்தித்துறை முனை ஆகிய பகுதிகளிலிருந்து மீன்பிடிக்கச் சென்று இராணுவத் தினரால் குறிப்பிட்ட நேரத்திற்கு முன்னரே கரைக்குத் திரும்பிய மீனவர்களே இவ்வாறு தாக்கப்பட் டுள்ளனர். அத்துடன் படையினர் அம் மீனவர்களின் வள்ளங் களையும் தாக்கி சேதமாக்கியுள் ளனர்என வடமராட்சி வடக்கு கடற்றொழிலாளர்கள் கூட்டுறவுச் சங்கச் செயலாளர் சூரியகுமார் தெரிவித்துள்ளார். இராணுவத்தினர் மீனவர்களிற்கு காலை 6.30 மணிக்கு முன்னர் கடற்கரைக்குத் திரும்பக்கூடாது எனப் பணித்திருந்தனர். இம்மீனவர் குறிப்பிட்ட நேரத்திற்கு முன்னரே திரும்பிய போது சிறிலங்காப் படையினரால் தாக்கப்பட்டுள்ளனர்.

இது பற்றிஇலங்கைப் போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவிடம் முறைப்பாடு செய்யப்பட் டுள்ளது. அத்துடன் இம் மீனவர்களின் சொத்துக்கள், உயிர் என்பவற்றைப் பாதுகாக்க உடனடி நடவடிக்கை எடுக்கும் வண்ணம் மீனவர் கூட்டுறவுச்சங்கம் போர்நிறுத்தக் கண் காணிப்புக் குழுவைக் கேட்டுள்ளது .(27)

## இளைஞர் யுவதிகளுக்கான இரண்டு நாள் பயிற்சிநெறி

ஆசிய அபிவிருத்தி வங்கியின் நிதியுதவியுடன் நிகொட் நிறுவனத்தின் அநுசரணையுடன் தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தினால் நடைமுறைப்படுத்தப்படுகின்ற வேலைத்திட்டங்களில் ஒன்றான இளைஞர் யுவதிகளுக்கான இரண்டு நாட்கள் அடங்கிய " வதிவிடப்பயிற்சிநெறி" விநாயகபுரம் கிராமத்தின் முன்பள்ளிக் கட்டடத்தில் கடந்த 19 ஆம்திகதி காலை 10.00 மணிக்கு சமூகபொருளாதார அபிவிருத்திச் சங்கத் தலைவர் கை. அலெக்ஸ்சாண்டர் தலைமையில் நடைபெற்றது. இப்பயிற்சி நெறியின் வளவாளர்களாக கிளிநொச்சி அன்னை இல்லத்தைச் சேர்ந்த பரமேஸ்வரன், சண்முகநாதன், செல்வி.யூடி, குணசீலன் ஆகியோர் பயிற்சியினை வழங்கினார்கள். இதில் இக் கிராமத்தைச் சேர்ந்த 30 இளைஞர் யுவதிகள் பயிற்சியில் பங்குபற்றிப் பயன்பெற்றுள்ளனர்.

## பயிற்சிப்பட்டறை நாளை நடைபெறாது

வன்னி தொழில்நுட்ப நிறுவக மாணவர்களால் நடாத்தப்பெற்று வரும் பயிற்சிப்பட்டறை நாளை இடம்பெறாது என்பதையும் நாளை மறுதினத்திலிருந்து ஆரம்பமாகி 01.10.2005 வரை நடைபெறும் என்பதனையும் வன்னிதொழில் நுட்ப நிறுவக மாணவர்கள் அறியத் தருகின்றனர்.

## பேச்சுவார்த்தையில்...

நேற்று முன்தினம் பளையிலுள்ள விடுதலைப்புலிகளின் யாழ்.மாவட்ட அரசியல்துறை செயலகத்திற்கு விஜயம் செய்த போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் தலைவர் ஹொக்லண்ட் உடனான பேச்சின் போதே மேற்கண்டவாறு அவர் தெரிவித்தார்.

அவருடன் போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் ஊடக தகவல் பிரிவைச் சேர்ந்த ஹெலனும் கலந்து கொண்டிருந்தார்.

காலை 11 மணிக்கு ஆரம்பமாகி சுமார் இரண்டு மணிநேரம் இச் சந்திப்பு இடம் பெற்றது.

இதேவேளை நேற்று போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் யாழ். அலுவலக தலைமையதிகாரியான அரிபெக்கா நிமலே இளம்பரிதி தலைமையிலான குழுவினரைச் சந்தித்துப் பேச்சு நடாத்தியிருந்தார்.

முன்னதாக ஹொக்லண்ட் தலைமையிலான குழுவினர் விமானம் மூலம் பலாலி வந்து அங்கிருந்து ஏ.9 வீதியூடாகப் பளையை வந்திருந்தடைந்ததாகத் தெரியவருகின்றது.

இவ்விரு சந்திப்புக்களிலும் கலந்துரையாடப்பட்ட விடயங்கள் தொடர்பாக ஊடகவியலாளர்களிடையே சி.இளம்பரிதி மேலும் விபரிக்கையில், சுனாமி கடற்கோள் அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட மீனவர்களிற்கு எதிரான படையினரது பாஸ் கெடுபிடிகள் அதிகரித்து வருகின்றன. அத்துடன்படையினர் மீண்டும் சிவில் நிர்வாக நடவடிக்கைகளில் தலையிட்டு வருகின்றனர் குறிப்பாக வர்த்தகர்கள், மீளக்குடியேறியவர்கள் தொடர்பான தகவல்களை வீடுவீடாகச் சென்று திரட்டுகின்றனர். இவையெல்லாம் புரிந்துணர்வு ஒப்பந்தத்தை அப்பட்டமாக மீறும் செயல் என்பதுதான் பொதுமக்களை கிளர்ந்தெழுவதற்கானதோர் சூழலையும் ஏற்படுத்தி வருகின்றது.

படையினர் அத்துடன் எமது அரசியல் பணிகளிற்கு தடைவிதித்தும் எங்களது போராளிகளது உயிர்களுக்கு கொலைப்பயமுறுத்தல் விடுக்கப்பட்டும் எமது கோரிக்கைகள் எதுவும் செவிமடுக்கப்படாத நிலையிலுமே எமது தலைமைப்பீடத்திற்கு நாம் இதனை முன்வைத்ததையடுத்து எமது பாதுகாப்புக் கருதி அனைத்து போராளிகளையும் அழைத்துக் கொண்டது. இந் நிலையில் எதிர்காலத்திலும் இவ்வாறானதோர் சூழலில் நாம் பணியாற்ற முடியாது. எனவே இதை உயர்மட்ட ரீதியாக பேசி உரிய தீர்வைப் பெற்று வழங்கினால் மட்டுமே குடாநாட்டிற்கு திரும்புவது பற்றி சிந்திக்க முடியும் எனவும் எடுத்துக் கூறியிருந்ததாக இளம்பரிதி மேலும் தெரிவித்தார்.

இதேவேளை முன்னரங்க நிலையப் பகுதிகளில் மாற்றங்களைச் செய்து வருவதாக அரச படைகளும் புலிகளும் மாறிமாறி குற்றம் சாட்டுகின்றனரே என எழுப்பப்பட்ட கேள்விக்கு பதிலளித்த அவர் விடுதலைப் புலிகளின்தங்களது நடவடிக்கைகளில் எந்த மாற்றத்தையும் செய்யவில்லை. ஆனால் எல்லோருக்கும் தெரிந்தவாறு படைத்தரப்பினர் குடாநாட்டிலும் முன்னரங்க நிலையங்களிலும் படையினரின் நடவடிக்கைகளை கூட்டியிருப்பது டன் படைகளைப் பலப்படுத்தியும் யுத்தத்திற்கு ஆயத்தமான நடவடிக்கைகளையும் மேற்கொண்டு வருகின்றனர்.

எனவே படையினர் மட்டுமே இவ்வாறான புரிந்துணர்வு மீறல் நடவடிக்கைகளை முன்னெடுத்து வருகின்றனர். விடுதலைப்புலிகள் அவ்வாறான எந்தவொரு முன்னெடுப்பிலும் ஈடுபடவில்லை என்றார். (27)

## – மல்லாவி சு. வை. அதிகாரி பணிமனை – சிற்றூழியர் தெரிவிற்கான நேர்முகப் பரீட்சை நாளை

(மல்லாவி)

மல்லாவி சு.வை.அதிகாரி பணிமனையின் கீழ் தொண்டராக கடமையாற்றி யோரில் 68 பேரின் பெயர் விபரங்கள் சிற்றூழியர்களுக்கு தெரிவு செய்வதற்கான நேர்முகப் பரீட்சைக்கு வெளியிடப்பட்டுள்ளன. பெயர் விபரங்கள் பெயர்ப் பலகையில் இடப்பட்டுள்ளன. இவர்களுக்கான நேர்முக தேர்வு நாளை காலை 9.30 மணிக்கு பி.மா.சு.சே பணிப்பாளர் பணிமனையில் நடைபெறும் என பதில் மேற்பார்வை பொது சுகாதார பரிசோதகர் பெ.கணேசமூர்த்தி தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்; கல்வித் தகைமைச் சான்றிதழ், பிறப்பு அத்தாட்சிப் பத்திர மூலப் பிரதி கிராம சேவையாளரின் நற் சான்றிதழ் வதிவிடச் சான்றிதழ் என்பவற்றுடன் நேர்முகத்தேர்வுக்கு வருமாறு தெரிவித்தார்.

மேற்படி தொண்டர்கள் நீண்ட காலமாக சுகாதார வேலைகளில் ஈடுபட்டு வந்துள்ளனர். என்பது குறிப்பிடத்தக்கது. (24)

# "றீற்றா" சூறாவளி; 30 அடி உயரமான தடுப்புச் சுவரைத் தாண்டி நியூஓர்லியன்ஸ் நகருக்குள் கடல் நீர் உட்புகுந்தது

(நியூஓர்லியன்ஸ்)

**அமெரிக்காவை மிரட்டிய றீற்றா சூறாவளி நேற்று நியூஓர்லியன்ஸ் பகுதியைத் தாக்கியதாகத் தெரிவிக்கப்படுகிறது. இது எதிர்பார்க்கப்பட்டதையும் விட வலுக்குறைவாக வீசியதாகவும் இதனால் பாரிய சேதம் தவிர்க்கப்பட்டதாவும் எனினும் ஏற்பட்ட சேதவிபரம் உடனடியாகத் தெரியவரவில்லை என அறிவிக்கப்படுகின்றது.**



அமெரிக்காவின் லூசியானா, புளோரிடா, அலபாமா, மிசிசிப்பி ஆகிய மாகாணங்களை கற்றினா சூறாவளி கடந்த மாதம் தாக்கியது. இதில் பத்தாயிரம் பேர் இதில் பலியாகி விட்டனர். நியூஓர்லியன்ஸ் நகரம்தான் பெருமளவு பாதிக்கப்பட்டது.

இந்த நிலையில் அமெரிக்காவை நோக்கி றீற்றா என்ற இன்னொரு சூறாவளி நெருங்கி வந்தது. டெக்சாஸ் மாநிலம் ஹுஸ்டன், கல்லெஸ்டன் ஆகிய நகரங்களை இது கடுமையாகத் தாக்கும் என்று அறிவிக்கப்பட்டது. இதைத்தொடர்ந்து டெக்சாஸ் மாநிலத்திலிருந்து 13இலட்சத்துக்கும் மேற்பட்டவர்கள் பாதுகாப்பான இடத்திற்கு வெளியேற்றப்பட்டனர். இந்த நிலையில் றீற்றா சூறாவளி சற்று திசை மாறியதுடன் அதன் வலுவும் சற்று குறைந்தது. சூறாவளி சற்று வலு இழந்தா லும் ஆபத்து நீங்கியபாடில்லை.

சூறாவளி திசை மாறியதைத் தொடர்ந்து கடலில் கொந்தளிப்பு ஏற்பட்டது. முன்பு சூறாவளி தாக்கிய நியூஓர்லியன்ஸ் நகரை ஒட்டியுள்ள பகுதியில் பலத்த காற்றுடன் கன மழை பெய்தது. மணிக்கு 200 கிலோ மீற்றர் வேகத்தில் காற்று வீசியது.

நியூஓர்லியன்ஸ் கடலோரப் பகுதியில் 30அடி உயரத்துக்குதடுப்புச் சுவர் கட்டப்படிருந்தது.இந்தத் தடுப்பு சுவரை தாண்டி வந்த இராட்சத அலைகள் நியூஓர்லியன்ஸ் நகரை தாக்கியது.இந்த நகருக்குள்ளும் அதன் அருகே உள்ள இன்னொரு நகரிலும் கடல் நீர் புகுந்தது இதில் எத்தனை பேர் பலியானார்கள் என்று உடனடியாகத் தெரியவில்லை. ஆனாலும் உயிரிழப்புக் குறைவாகவே இருக்கும் என்று அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.




*சூறாவளித் தாக்கத்திலிருந்து மக்களைப் பாதுகாப்பாக எடுத்துச் செல்லும் பாடசாலைச் சேவைப் பேருந்துகளைப் படத்தில் காணலாம்.*

## பாக்தாத்தில் குண்டுத்தாக்குதல் மூன்று இராணுவத்தினர் பலி

(பாக்தாத்)

பாக்தாத்தில் ஒரு இராணுவ சோதனைச் சாவடி மீது தீவிரவாதிகள் கார்க் குண்டுத் தாக்குதல் நடத்தியதில் மூன்று இராணுவத்தினர் உட்பட நான்கு பேர் பலியாகினர். மேலும் ஐந்து பேர் படுகாயமடைந்துள்ளனர்.



*நேற்று அமெரிக்காவின் டெக்சாஸ் மாநிலக்கரையோரத்தைத் தாக்கிய றீற்றா சூறாவளி மையம் கொண்டிருந்ததை ஓசோன், மற்றும் வளிமண்டலத் திணைக்களம் மூலம் எடுக்கப்பட்ட படம்.*



*றீற்றா சூறாவளி தாக்கும் என்ற அச்ச உணர்வு அமெரிக்காவை ஆட்டி எடுத்து வருகிறது. ஹுஸ்டன் நகர் மக்கள் மாற்று இடம் செல்ல விமான நிலையத்தில் காத்து நிற்கின்றனர்.*



*அமெரிக்காவின் பாஸ்கோலா நகரிலுள்ள பீச் பார்க்கினை முற்றிலும் அழித்து விட்ட றீற்றா சூறாவளி*

## றீற்றா சூறாவளி எதிரொலி பேருந்து தீப்பிடித்தது 20 பேர் பலி



(ஹுஸ்டன்)

அமெரிக்காவில் 'றீற்றா சூறாவளி கடந்து செல்லும் பாதையில் ஒரு பேருந்து தீப்பிடித்து எரிந்ததில் 20 பேர் இறந்துள்ளனர்.

அமெரிக்காவில் டெக்சாஸ் மாகாணத்திலுள்ள ஹுஸ்டன், கல்வெஸ்டன் நகரங்களை றீற்றா சூறாவளி மிரட்டி வருகிறது. இவ் விரு நகரங்களில் இருந்து இலட்சக்கணக்கான மக்கள் வெளி யேறி வருகின்றனர். ஆயிரக்கணக்கான வாகனங்களில் அவர்கள் செல்லும் நெடுஞ்சாலையையும் றீற்றா சூறாவளி கடந்து செல்லும் பாதையில் அமைந்திருப்பதால் அங்கு ஏற்பட்டுள்ள போக்குவரத்து நெரிசல் அதிகாரிகளுக்கு கவலையை ஏற்படுத்தியுள்ளது.

இந் நிலையில், ஹுஸ்டன் நகரின் புறநகர்ப் பகுதியான தல்லாஸ் என்ற இடத்தில் நேற்று முன்தினம் ஒரு பேருந்து தீப்பிடித்து எரிந்து 20 பேர் இறந்ததாக ஹுஸ்டன் நகர உள்ளூர் தொலைக்காட்சி தெரிவித்துள்ளது.

# ஊர்வலம் நடத்தியோர் மீது தாக்குதல் காஸாவில் 19 பேர் பலி; 80 பேர் காயம்

(ஜெருசலம்)

காஸா பகுதியில் ஜபாலியா அகதிகள் முகாம் அருகே நடந்த ஊர்வலத்தில் குண்டு வெடித்ததில் 19 பலஸ்தீனியர்கள் கொல்லப்பட்டனர். 80 பேர் காய மடைந்தனர். இது ஒரு விபத்து என்று சொல்லப்பட்டாலும், பலஸ்தீனர்கள் இது இஸ்ரேலிய தாக்குதலால் நடந்தது தான் என்கிறார்கள். இஸ்ரேல் பகுதியில் இருந்து ஏவுகணை வந்து தாக்கியதாக அவர்கள் சொல்கிறார்கள். ஆனால் இஸ்ரேல் அதை மறுத்துள்ளது.

இஸ்ரேலுக்கும் பலஸ்தீனத்துக்கும் இடையே நீண்ட நாட்களாக இருந்து வந்த பிரச்சினையை முடிவுக்கு கொண்டுவர சமரச முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன.

இதன் ஒரு பகுதியாக 1967 ஆம் ஆண்டு முதல் இஸ்ரேல் தனது கட்டுப்பாட்டில் வைத்திருந்த காஸாப் பகுதியை மீண்டும் பலஸ்தீனத்திடம் ஒப்படைத்தது. இஸ்ரேல் படைகள் அங்கிருந்து வாபஸ் ஆனது யூதக் குடியிருப்புக்களும் அகற்றப்பட்டன.

இந்த வெற்றியைக் கொண்டாடும் வகையில் பலஸ்தீன ஹமாஸ் தீவிரவாதிகள் தினந்தோறும் பேரணிகள் நடத்தி வருகின்றார்கள். நேற்று முன்தினம் மாலை நடந்த ஊர்வலத்தில் ஆயிரக்கணக்கான பலஸ்தீனர்கள் கலந்து கொண்டனர். ஹமாஸ் தீவிரவாதிகளும் ஒரு வண்டியில் ஆயுதங்கள் மற்றும் துப்பாக்கிகள், வெடி குண்டுகளை ஏற்றிக்கொண்டு பேரணியில் சென்றனர்.

அப்போது அந்த வண்டியில் திடீர் என்று குண்டு வெடித்தது. இதில் பெண்கள், குழந்தைகள் உட்பட 19 பேர் உடல் சிதறிப் பலியானார்கள். 80 இற்கும் மேற்பட்டவர்கள் காயமடைந்துள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.



*நேற்றுக்காலை காஸா நகரில் இஸ்ரேலிய விமானத் தாக்குதலில் சேதமான தனது உலோக வேலைத் தளத்தைப் பார்வையிடும் பலஸ்தீனர் ஒருவர்.*

# அணுவாயுத தடை ஒப்பந்தத்தில் கையெழுத்திடுங்கள் இந்தியா–பாகிஸ்தானுக்கு அனான் கோரிக்கை

இந்தியா- பாகிஸ்தான் உட்பட 11 நாடுகளை அணுவாயுத பரவல் தடை ஒப்பந்தத்தில் கையெழுத்திடுமாறு ஐ.நா பொதுச் செயலாளர் கொபி அனான் கேட்டுக் கொண்டுள்ளார்.

அணுவாயுதங்கள் உலக அமைதிக்கு ஆபத்தாக இருக்கின்றன. அதனால் அணுவாயுத தொழில் நுட்பம் பரவுவதைத் தடுக்கும் நோக்கத்துடன் அணுவாயுத சோதனைக்குத் தடை விதிக்கும் ஒப்பந்தம் ஒன்று தயாரிக்கப்பட்டுள்ளது. இதில் மொத்தம் 176 நாடுகள் கையெழுத்திட்டுள்ளன. 125 நாடுகள் இந்த ஒப்பந்தத்துக்கு ஒப்புதல் அளித்துள்ளன. இது உலகம் முழுவதும் செயற்படுத்தப்பட வேண்டுமானால் 11 நாடுகள் இந்த ஒப்பந்தத்தில் கையெழுத்திட வேண்டும். இந்தியா, பாகிஸ்தான், சீனா, அமெரிக்கா, வடகொரியா, எகிப்து, இந்தோனேஷியா, ஈரான், இஸ்ரேல், வியட்னாம், கொலம்பியா ஆகிய நாடுகள் இன்னும் கையெழுத்திடப்படவில்லை.

இந்த ஒப்பந்தத்தில் கையெழுத்திடும் படி 11 நாடுகளையும் ஐ.நா பொதுச்செயலாளர் கொபி அனான் கேட்டுக் கொண்டுள்ளார்.

"இந்த ஒப்பந்தம் நடைமுறைப்படுத்தப்பட வேண்டுமானால் இந்த 11 நாடுகளும் கையெழுத்திட வேண்டும். கையெழுத்திடாமல் தாமதித்துக் கொண்டே போனால், ஆபத்தும் அதிகரித்துக் கொண்டே போகும். இந்த ஒப்பந்தம் ஒன்பது ஆண்டுகளுக்கு முன்பு தயாரிக்கப்பட்டு கையெழுத்துக்கு வந்தது. இன்னும் அது செயல் உருவம் பெறவில்லை என்பது கவலை அளிக்கிறது. 11 நாடுகள் இன்னும் கையெழுத்திடாதது. எந்த நோக்கத்துக்காக இது கொண்டு வரப்பட்டதோ அந்த நோக்கத்துக்கு இது ஒரு பின்னடைவு ஆகும் என கொபிஅனான் கூறினார்.

# நியூயோர்க் சந்தையில் எண்ணெய் விலை வீழ்ச்சி

(நியூயோர்க்)

அமெரிக்காவிலுள்ள டெக்சாஸ் மாநிலத்தில் தான் எண்ணெய்க் கிணறுகள் அதிகம் இருக்கின்றன. அங்கு றீற்றா சூறாவளி தாக்கப் போகிறது என்றதும் எல்லோரும் எண்ணெய் விலை உயரும் என்று எதிர்பார்த்தார்கள். ஆனால் எதிர்பார்த்தபடி றீற்றா சூறாவளியின் வேகம் இல்லாததால் சேதமும் எதிர்பார்த்ததை விடக்குறைவாகவே இருக்கும் என்று நம்பப்படுகிறது. இந் நிலையில் நியூயோர்க் சந்தையில் மசகு எண்ணெயின் விலை குறைந்துள்ளது.

# அனுமதியற்ற கட்டடங்களை அகற்ற கரைச்சி பி.ச ஆணையாளர் அறிவுறுத்தல்

(அலுவலக செய்தியாளர்)

அனுமதியற்ற கட்டட அமைப்புக்களை அகற்றுவது சம்பந்தமாக சம்பந்தப்பட்ட வர்த்தக நிலையங்களுக்கு கரைச்சி பிரதேசசபை விசேட ஆணையாளரினால் அறிவுறுத்தல்கள் கொடுக்கப்பட்டுள்ளதாகத் தெரியவந்துள்ளது.

ஏ-9 வீதிக்கருகாமையில் கட்டட திருத்த வேலைகள் மேற்கொள்ளப்பட்டு வியாபார நடவடிக்கைகள் மேற்கொண்டு வரும் வர்த்தக நிலையங்களை ஏ-9வீதியின் மத்தியிலிருந்து 66 அடிக்கு அப்பால் அகற்றுவதற்கு 31.12.2005 வரை காலக்கெடு வழங்கப்பட்டுள்ளதெனவும், ஏனைய சகல தற்காலிக, நிரந்தர, உடைந்த கட்டடங்கள் உடனடியாக ஏ-9வீதியின் மத்தியிலிருந்து 66அடிக்கப்பால் அகற்றப்படவேண்டுமெனவும் அதேபோன்று அனுமதி பெறப்படாத விளம்பரங்கள் யாவும் 1.10.2005 இற்கு முன் அகற்றப்படல் வேண்டுமெனவும், தவறுமிடத்து கரைச்சி பிரதேச சபையினால் இவைகள் அகற்றுவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பெற்று அதற்கான தண்டமும் அறவிடப்படுமென கரைச்சிப் பிரதேச விசேட ஆணையாளர் பொன் நித்தியானந்தன் தெரிவித்துள்ளார். (சோ)



வெட்டப்பட்ட இளநீர்க் கோம்பைகள் கிளிநொச்சி நகர் குளத்திற்கருகாமையில் கொட்டப்பட்டுள்ளதன் காரணமாக எதிர்வரும் மழை காலத்தில் கழிவுநீர் தேங்கி நுளம்புப் பெருக்கம் ஏற்படக்கூடிய ஏது நிலைக்கு காரணியாக அமைந்துள்ளது கொட்டப்பட்டுள்ள இளநீர்க் கோம்பைகளை படத்தில் காணலாம் (படம். சோதி)

# முல்லை. தொழில்நுட்பக்கல்லூரியில் புதிய தொழில் பயிற்சிக் கூடங்கள் திறப்பு

*(முல்லை)*

***முல்லை. தொழில்நுட்பக் கல்லூரியின் புதியகட்டடத் திறப்பும், தொழிற்பயிற்சி ஆரம்பவிழாவும் முல்லை தொழில்நுட்பக் கல்லூரியில் கடந்த வியாழனன்று காலை 10.30 மணியளவில் கல்லூரி அபிவிருத்தித் தலைவர் தலைமையில் ஆரம்பமானது.***

இந்நிகழ்வின் பொதுச்சுடரினை கரைதுறைப்பற்று உதவி அரச அதிபர் சோதிநாதன் ஏற்றினார். தமிழீழ தேசியக் கொடியினை முல்லை மாவட்ட அரசியல் துறை பொறுப்பாளர் செ.முகுந்தன் ஏற்றினார். தொழில்நுட்பக் கல்லூரியின் கொடியினை கல்லூரி அதிபர் வைரமுத்து ஏற்றினார்.மங்கல விளக்கினை ரெக்நிறுவனப் பணிப்பாளர் திலக், வூஜ் நிறுவன சிரேஸ்ட உத்தியோகத்தர் சத்தியசீலன், கமநல சேவை உத்தியோகத்தர் ராஜலட்சுமி, லண்டன் ரெக்நிறுவன பிரதிநிதி, கெயார் நிறுவன பிரதிநிதி, உலக உணவுத்திட்ட இணைப்பாளர் லோகேஸ், சீடு நிறுவனப்பிரதிநிதி ஆகியோர் ஏற்றினார்கள். மின்னொட்டுப் பயிற்சி மண்டபத்தினை வூஜ் நிறுவன வெளிக்கள இணைப்பாளர் ஜெயராஜசிங்கம் நாடாவை வெட்டித் திறந்து வைத்தார். மின்னொட்டுப் பயிற்சியினை கடற்புலிகளின் முல்லை.மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் ரங்கன் ஆரம்பித்து வைத்தார்.

கட்டட நிர்மாண மேசன் பயிற்சிக்கான கட்டடத்தினை ஜேர்மன் வூஜ் நிறுவனப்பிரதிநிதி வலற்றி திறந்து வைத்தார்.

மேசன் பயிற்சியினை முல்லை. மாவட்ட நீர்ப்பாசனப் பொறியியலாளர் சிவகுமார் ஆரம்பித்து வைத்தார்.

மரவேலை பயிற்சி மண்டபத்தினை உதவி அரச அதிபர் தலைமைப்பீட அதிகாரி செல்வி ஆரணி திறந்து வைத்தார். இதற்கான பயிற்சியினை முல்லை.மாவட்ட திட்ட அமுலாக்கல் பணிப்பாளர் யாழமுதன் ஆரம்பித்து வைத்தார்.

நிகழ்வில் ஆசியுரையினை முல்லை. உதவிப்பங்குத்தந்தை திருமகன் அடிகளார் நிகழ்த்தினார். வரவேற்புரையினை தொழில்நுட்பக் கல்லூரிப் பணியாளர் வழங்கினார். தொடர்ந்து நிகழ்வில் கருத்துரைகளை வூஜ் நிறுவன வெளிக்கள இணைப்பாளர் ஜெயராஜசிங்கம், ரெக் நிறுவனத்தைச் சேர்ந்த சுந்தரமூர்த்தி ஆகியோர் வழங்க, சிறப்புரைகளை முல்லை. மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் முகுந்தன், கடற்புலிகளின் முல்லை.மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் ரங்கன் ஆகியோர் வழங்கினர். தொடர்ந்து பயிற்சியாளர்களுக்கான துவிச்சக்கர வண்டியினை தமிழீழத் தேசியத் தொலைக்காட்சி செய்தியாளர் அருணா உட்பட பலர் வழங்கினார்கள். இந்நிகழ்வில் மாணவர்கள், ரெக்நிறுவன பிரதிநிதிகள், வூஜ் நிறுவனப்பிரதிநிதிகள் கல்லூரி நிர்வாக உறுப்பினர் எனப் பெருமளவானோர் கலந்து கொண்டனர். (20)

# சமூக மட்ட குழுக்களை மேம்படுத்த. பயிற்சி நெறி

ஆசிய அபிவிருத்தி வங்கியின் நிதியுதவியுடன் நிகொட் திட்டத்தின் அனுசரணையுடன் தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தினால் நடைமுறைப் படுத்தப்படுகின்ற வேலைத்திட்டங்களில் ஒன்றான சமூக மட்ட குழுக்களை மேம்படுத்துதல் என்ற நோக்கோடு " பால்நிலை சமத்துவம்" எனும் தலைப்பில் கடந்த செவ்வாய் அன்று காலை 10.00 மணிக்கு காஞ்சிபுரம் கிராமத்தின் முன்பள்ளியில் நிகொட் வருமானத்திட்டக் கணக்காளர் தலைமையில் பயிற்சி நெறி நடைபெற்றது.இப்பயிற்சி நெறியின் வளவாளராக கிளிநொச்சி தொழில்நுட்ப கல்லூரி திட்ட இணைப்பாளர் சி. இராமநாதன் பயிற்சியினை வழங்கினார். இதில் இக்கிராம மட்ட அமைப்புக்களைச் சார்ந்த 23 உறுப்பினர்கள் பங்குபற்றி பயன் பெற்றுள்ளனர்.இதேபோன்று "உளவியல்" எனும் தலைப்பில் கடந்த திங்கள் அன்று மாலை 7.30 மணிக்கு மேற்படி காஞ்சிபுரக் கிராமத்தின் சமூக உணர்வூட்டாளர் தலைமையில் பயிற்சிநெறி நடைபெற்றது. இப் பயிற்சி நெறியின் வளவாளராக கிளிநொச்சி அன்னை இல்லத் தைச் சேர்ந்த பெ.கணேசமூர்த்தி பயிற்சியினை வழங்கினார். இக்கிராம மட்ட அமைப்புக்களைச் சார்ந்த 30 உறுப்பினர்கள் பயிற்சியில் பங்கு பற்றி பயன்பெற்றுள்ளனர்.

# கிரவல் மண் அகழ்வு நடவடிக்கைகள் சீராக்கம்

(மல்லாவி)

பாண்டியன்குளம் துணுக்காய் பிரதேசங்களில் கிரவல் மண் அகழ்வதனால் ஏற்பட்ட சூழல் பாதுகாப்பினை கருத்திற் கொண்டு தமிழீழ நிர்வாகசேவை முல்லை. கிளைச் செயலகத்தினரால் கிரவல் அகழ்வது தொடர்பான நடைமுறைகள் அந்தந்தப் பகுதி அரச, அரசசார்பற்ற நிறுவனங்கள் ஒப்பந்தகாரர்களுக்கு துண்டு பிரசுரங்கள் மூலம் அறிவுறுத் தப்பட்டுள்ளது.

இதனைக் கருத்திற் கொண்டு சம்பந்தப்பட்டவர்கள் உரிய முறையில் கிரவல் மண் அகழ்வினை மேற்கொள்ள முடியும் என்பதை தமிழீழ நிர்வாகசேவை முல்லை கிளை செயலகத்தினர் தெரிவித்தனர். (24)

# சுனாமியால் பாதிப்புற்ற விவசாயிகளுக்கு உதவி

(முல்லைத்தீவு)

முல்லை. மாவட்டத்தில் சுனாமியால் பாதிக்கப்பட்ட விவசாய மக்களுக்கான உள்ளீடுகளை உலக விவசாய ஸ்தாபனத்தின் அனுசரணையுடன் விவசாயத் திணைக்களமும் முல்லை. மாவட்ட தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனமும் இணைந்துவழங்கிவருகின்றன.

இதனடிப்படையில் முதற்கட்டமாக 1600 விவசாயிகளுக்கான உர வகைகளை வழங்கி வருகின்றன.தொடர்ந்து விதைநெல் வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. (20)

# முன்பள்ளி முதன்மை ஆசிரியர்களுக்கான மூன்றுநாள் வதிவிடப் பயிற்சி நெறி



(அலுவலக செய்தியாளர்)

வடக்கு கிழக்கு மாகாண முன்பள்ளி முதன்மை ஆசிரியர்களுக்கான மூன்று நாள் வதிவிடப்பயிற்சி நெறி ஆரம்ப நிகழ்வு நேற்று முன்தினம் கிளிநொச்சி கனகபுரம் வடக்கு கிழக்கு மாகாண முன்பள்ளி கல்வி மேம்பாட்டு பயிற்சி நிலையத்தில் வட கிழக்கு மாகாண முன்பள்ளி இணைப்பாளர் திருமதி. ரேணுகா தலைமையில் நடைபெற்றது.

புலம் பெயர் தல் தொடர்பான சர்வதேச அமைப்பின் (i.o.m) ஆதரவுடனும் தமிழர் புனர் வாழ்வுக் கழகத்தின் அனுசரணையுடனும் வடக்கு கிழக்கு மாகாண முன்பள்ளி கல்வி மேம்பாட்டு நிலையம் இணைந்து நடாத்தும் பயிற்சி நெறி நிகழ்வின் ஆரம்ப நிகழ்வாக மங்கல விளக்கேற்றலைத் தொடர்ந்து தமிழீழ தேசியக் கொடியினை கிளி. மாவட்ட அரசியல் துறை துணைப் பொறுப்பாளர் அருள் ஏற்றி வைத்தார். புலம் பெயர்தல் தொடர்பான சர்வதேச அமைப்பு (i.o.m) நிறுவன இலங் கைக்கான பணிப்பாளர் றணசிங்கா, கிளிநொச்சி மாவட்ட மேலதிக அரசஅதிபர் நா.வேதநாயகன், கரைச்சி பிரதேச சபை விசேட ஆணையாளர் பொன் நித்தியானந்தன், தமிழர் புனர்வாழ்வுக் கழக திட்டப்பணிப்பாளர் லோறன்ஸ் கிரிஸ்டி, கிளிநொச்சி மாவட்ட அரசசார்பற்ற நிறுவன இணையத் தலைவர் கனேசபிள்ளை, உளவள துணை நிலைய இயக்குனர் வணபிதா றெஜினோல்ட் அடிகள், அம்பாறை மாவட்ட பாலமுனை பிரதேச முன்பள்ளி இணைப்பாளர் அசீமா மற்றும் பலர் கலந்து கருத்துரை வழங்கினர்.இப்பயிற்சி நெறி இன்று வரை நடைபெறும். வதிவிட பயிற்சி நெறி நிகழ்வில் 90 இற்கும் மேற்பட்ட முன்பள்ளி முதன்மை ஆசிரியர்கள் கலந்து கொண்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (சோ)

# கண்டாவளைப் பிரதேசத்தில் வரட்சியை அடுத்து மக்களுக்கான குடிநீர் வழங்கும் சேவை

(விசுவமடு)

கண்டாவளைப் பிரதேசத்தில் தற்போது ஏற்பட்டிருக்கும் வரட்சி காரணமாக கண்டாவளைப் பிரதேச செயலக சமூக சேவைப் பகுதியினரால் மக்களுக்கான குடிநீர் வழங்கும் வேலைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

தற்போது கண்டாவளைப் பிரதேச செயலர் பிரிவில் கடும் வரட்சி ஏற்பட்டுள்ள ஏழு கிராமங்களுக்கு குடிநீர் வழங்கும் வேலைகள் கண்டாவளைப் பிரதேச செயலர் கி.சத்தியசீலனின் ஒழுங்கு படுத்தலில் நடைபெற்று வருகின்றது.

கிராமங்களுக்கு வாகனங்களில் காலை வேளையில் தண்ணீர் எடுத்துச் சென்று கிராமங்களின் மையப்பகுதியில் பல இடங்களில் நீர் விநியோகம் மேற் கொள்ளப்பட்டு வருகின்றது. இதன் காரணத்தினால் மக்களுக்கான குடிநீர் தேவைகள் நிவர்த்தி செய்யப்பட்டு வருகின்றது. உமையாள்புரம்,பரந்தன், கோரக்கன்கட்டு, பெரியகுளம்,தருமபுரம் கிழக்கு, தருமபுரம் மேற்கு, புன்னைநீராவி பிரமந்தனாறு ஆகிய கிராமங்களில் மக்கள் செறிவாக வாழும் இடங்களில் எடுத்துச் சென்று குடிநீர் வழங்கி வருவதால் மக்களுக்கான குடிநீர் கஸ்டம் நீங்கப் பெற்றுள்ளதாக மக்கள் தெரிவித்துள்ளனர். இருந்த போதிலும் கிராமங்களிலுள்ள சிறிய குளங்களில் முற்றாக நீர்வற்றி வரண்டு காணப்படுவதால் கால்நடைகள் குடிநீர் இன்றி அவதிப்படுவதுடன் மற்றும் மனிதர்களின் ஏனைய பாவனைக்கான தண்ணீருக்கு பெரும் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதை மக்கள் சுட்டிக்காட்டியுள்ளனர். (46)





துணுக்காய் வலய மட்ட முன்பள்ளிகளுக்கான கலைநிகழ்வு கடந்த 17 ஆம் திகதி நடைபெற்றது. சிறார்களின் இருவேறு கலை நிகழ்வுத் தோற்றங்களைப் படங்களில் காணலாம். (படம்:- கவிப்பரசன்)

# பொங்குதமிழ்-2005 நிகழ்வுகள் குறித்து ஏற்பாட்டுக் குழு அறிவிப்பு

**வரும் 30ஆம் திகதி யாழ்.பல்கலைக்கழக மைதானத்தில் இடம்பெறவுள்ள பொங்கு தமிழ் நிகழ்விற்கான ஏற்பாடுகள் பூர்த்தியடைந்துள்ளது நிகழ்வில் மக்கள் கலந்து கொள்ள வசதியாகவும் நிகழ்வை வெற்றிகரமாக நடாத்தி முடிப்பதற்காகவும் யாழ் பொங்கு தமிழ் ஏற்பாட்டுக் குழு பின்வரும் நடைமுறைகளைப் பின்பற்றுமாறு கேட்டுக்கொள்கின்றது.**

குறிப்பிட்ட தினம் பகல் 12.00 மணியுடன் கச்சேரி, பிரதேச செயலகங்கள் மற்றும் அரச நிறுவனங்கள்,வங்கிகள், ஏனைய நிதி நிறுவனங்கள் அனைத்தையும் மூடி உத்தியோகத்தர்கள், ஊழியர்கள் நிகழ்வில் கலந்து கொள்ள வசதிசெய்யும் படியும். வியாபார நிலையங்கள், மருந்துக்கடைகள், ஏனைய வியாபார நடவடிக்கைகள், சந்தைகள், கட்டட ஒப்பந்த சேவைகள் அனைத்தையும் அன்றைய தினம் முழுமையாக மூடும்படியும் அரச, தனியார் போக்குவரத்து சேவைகள் எதுவும் இடம்பெறாது என்பதனால் ஏ-9 பாதையூடாக பிரயாணம் செய்யும் பயணிகள் அன்றய தினம் தங்களது பிரயாணத்தினை தவிர்க்கும் படியும் வேண்டுகின்றோம். பாடசாலைகள் வழமைபோல் இயங்கும் பாடசாலை முடிவடையும் போது அல்லது பாடசாலைக்கு வாகனங்கள் வரும் போது ஆசிரியர்களும், மாணவர்களும் நிகழ்விற்கு செல்ல அனுமதிக்கும்படி கேட்கின்றோம்.

மதுச்சாலைகள், அனைத்தும் திரைப்படஅரங்குகளும் அன்றைய தினம் முழுமையாக மூடப்படல்வேண்டும்.

அன்றைய தினம் பொதுமக்கள் நிகழ்வில் கலந்து கொள்ள வசதியாக வலிகாமம் மேற்கு, வலிகாமம் வடக்கு, வலிகிழக்கு, வடமராட்சி, தென்மராட்சி, தீவகம் போன்ற பிரதேசங்களில் இருந்து வாகனவசதிகள் பூரணமாக செய்யப்பட்டுள்ளது. நிகழ்வு நடை பெறும் மைதானத்தில் இம்முறை நான்கு பாதைகள் அமைக்கப்பட்டுள்ளதுடன், குடிநீர் வசதிகளும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன.

நிகழ்வுக்கு அழைத்து வரப்படும் மக்கள் உரியவாறு 7.30 மணிக்கு முன்னதாக தங்களது வீடுகளுக்கு சென்றடையக் கூடியவகையில் வாகன ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன என்பதையும் தெரியப்படுத்துகின்றோம்.

அனைத்து மக்களும் அலைகடலென அணி திரண்டு உரிமைக்குரலை வெளிப்படுத்தி போரை தவிப்போம் உரிமைகளை வென்றெடுப்போம்.

# நன்னீர் கிணற்றுள் வயோதிபரின் சடலம்

(பருத்தித்துறை)

நன்னீர் கிணற்றுள் தவறி விழ்ந்ததாகத் தெரிவிக்கப்படும் வயோதிபரின் சடலம் மீட்கப்பட்டுள்ளது. மாயக்கை தம்பசிட்டியைச் சேர்ந்த சின்னத்தம்பி ஆறுமுகம் (வயது-75) என்பவரது சடலமே நன்னீர்க் கிணற்றில் இருந்து மீட்கப்பட்டுள்ளது.

மேற்படி சம்பவம் நேற்று முன்தினம் காலை 6.00 மணிக்கு மாயக்கை பிள்ளையார் கோவில் நன்னீர்க் கிணற்றில் நீர் அள்ளச் சென்றவர்களால் கண்டுபிடிக்கப்பட்டது.

சம்பவத்தை அக்கிராம சேவகர் பருத்தித்துறை சிறிலங்கா பொலிசாருக்கு தெரிவித்ததையடுத்து, திடீர் மரண விசாரணை அதிகாரியும், பதில் நீதவானுமாகிய ந. தங்கராஜா, பருத்தித்துறை பொலிசாருடன் சம்பவ இடத்திற்குச் சென்று விசாரணையைமேற்கொண்டு சடலத்தை பிரேத பரிசோதனைக்காக பருத்தித்துறை ஆதார வைத்தியசாலைக்கு அனுப்பிவைத்தார்.

பிரேத பரிசோதனையை மேற்கொண்ட மாவட்ட வைத்திய அதிகாரி சி.கதிரவேற்பிள்ளை தனது அறிக்கையில் தெரிவித்துள்ளதாவது; வயோதிபரின் இரைப்பையில் இரண்டு அவுன்ஸ் சாராயம் இருந்ததாகவும் மதுபோதையாலேயே முதல்நாள் மாலைப் பொழுதினிலேயே தவறி விழ்ந்திருக்கலாமெனவும் தெரிவித்துள்ளார். (கா)

# முதியோர் வாரத்தை முன்னிட்டு இன்று நடமாடும் சேவை

(கரவெட்டி)

முதியோர் வாரத்தை முன்னிட்டு கரவெட்டி பிரதேச செயலகத்தினால் ஒழுங்கு செய்யப்பட்டுள்ள நடமாடும் சேவையில் பின்வரும் சேவைகள் இலவசமாக வழங்கப்படவுள்ளது.

கண்மருத்துவ முகாம், பொது மருத்துவ முகாம், முதி யோருக்கான அடையாள அட்டை வழங்கல், மூக்குக்கண்ணாடி, ஊன்று கோல், சக்கரநாற்காலி, முச்சக்கர வண்டி வழங்கல், இதில் 65 வயதிற்கு மேற்பட்ட முதியோர்கள் பங்குபற்றி பயன்பெறுமாறும், அத்துடன் சமூகப் பாதுகாப்பு ஓய்வூதியத் திட்டம் ( 18 வயதிற்கும் 59 வயதிற்கும் இடைப்பட்டவர்களுக்கானது)

இச்சேவைகள் திருஇருதயக் கல்லூரி, கொடிகாமம் வீதி, நெல்லியடி, கரவெட்டியில் இன்று காலை 8.30 தொடக்கம் 12.00 மணி வரையும்.

மாலை 1.00 மணி தொடக்கம் 5.00 மணிவரை உடுப்பிட்டி மகளிர் கல்லூரி, உடுப்பிட்டி சந்தி, உடுப்பிட்டியிலும் இடம்பெறவுள்ளது.

கண் மருத்துவமுகாம் திரு இருதயக் கல்லூரியில் மட்டும் நடைபெறவுள்ளது. இதில் வயோதிபர்கள், பயனாளிகள் கலந்து பயன்பெறும் வண்ணம் கோரப்பட்டுள்ளது.

இதன் அனுசரணையாளர்களாக லயன்ஸ் கழகம், யூ.என்.எச்.சி.ஆர். நிறுவனம், மாவட்ட வைத்தியசாலை, பருத்தித்துறை சமுர்த்தி சமூக அபிவிருத்தி மன்றம் ஆகியன உள்ளன. (கா)

## வெளிச்ச வீடு அமைக்க நிதி ஒதுக்கீடு

வடமராட்சி கிழக்கு மருதங்கேணி மீனவர்களின் நலன் கருதி புதிய வெளிச்சவீடு ஒன்று அமைக்கப்படவுள்ளது. இவ் வெளிச்சவீடு இரண்டு இலட்சத்து ஐம்பதாயிரம் ரூபா செலவில் அமைக்கத் திட்டமிடப்பட்டுள்ளது. இதற்கான நிதியை இவ் வாண்டிற்கான பன்முகவரவு செலவுத் திட்டத்தின் கீழ் தமிழ் தேசிய கூட்டமைப்பு யாழ். மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் செ.கஜேந்திரன் ஒதுக்கீடு செய்துள்ளார். (கா)

# "தமிழீழ அரசை அங்கீகரிக்கக் கோரி பொங்குதமிழ்" வடமராட்சி மக்களுக்கு விழிப்புணர்வூட்டல்

(வடமராட்சி)

தமிழீழ அரசை அங்கீகரிக்கக் கோரி எதிர்வரும் 30 ஆம் திகதி இடம்பெறவுள்ள பொங்குதமிழ் எழுச்சி நிகழ்வில் மூன்று இலட்சம் மக்களை ஒன்று திரட்டும் நடவடிக்கையில் யாழ். பல்கலைக்கழக சமூகத்தினர் மிக தீவிரமாக பிரச்சார நடவடிக்கையில் ஈடுபட்டு வருகின்றனர்.

இவ்வாறு சுயநிர்ணய உரிமையோடு தமிழர்கள் வாழ்வை சுதந்திரமாக இட்டுச்செல்ல, தமிழீழ அரசை அங்கீகரிக்கக்கோரும் பொங்கு தமிழ் நிகழ்வுக்கு மக்களை ஒன்று திரட்டும் வகையில் யாழ். பல்கலைக்கழக மாணவர்கள் வடமராட்சியின் கிராமங்கள் தோறும், மக்களின் இல்லிடங்களுக்குச் சென்று மக்களோடு உரையாடி, பொங்குதமிழ் தொடர்பான விளக்கவுரைகளை வழங்கி வடமராட்சி மக்களை விழிப்புணர்வூட்ட மிகத் தீவிரமான முறையில் பிரச்சார நடவடிக்கையில் யாழ். பல்கலைக்கழக மாணவர்களும் பாடசாலை மாணவர்களும் ஈடுபட்டு வருகின்றனர்.

அத்தோடு பொங்குதமிழ் தொடர்பான பதாகைகள் சந்திகள் தோறும் கட்டப்பட்டுள்ளதுடன் சிவப்பு, மஞ்சள் கொடிகளும் பறக்கவிடப்பட்டு பெரு எழுச்சிக் கோலம் பூண்டிருப்பதை காணக்கூடியதாகவுள்ளது. (கா)

# வயோதிபப் பெண் மீது வல்லுறவு முயற்சி இராணுவச் சிப்பாய்க்கு இரு வருடச்சிறை

(யாழ்ப்பாணம்)

வயோதிபப் பெண் ஒருவரை பாலியல் வல்லுறவுக்குட்படுத்த முனைந்தார் என்றகுற்றச்சாட்டின் பேரில் சிறிலங்கா இராணுவச் சிப்பாய் ஒருவருக்கு யாழ். மாவட்ட நீதிமன்றம் இரண்டுவருடச்சிறைத்தண்டனை விதித்துள்ளது.

யாழ். நீர்வேலிப் பகுதியில் தனிமையில் வாழ்ந்து வந்த வயோதிபப் பெண் ஒருவரை பாலியல் வல்லுறவுக்குட்படுத்த முற்பட்ட இராணுவச் சிப்பாய் ஒருவர் பொதுமக்களால் விரட்டியடிக்கப்பட்ட சம்பவம் கடந்த மே மாதம் இடம்பெற்றது.

இந்த ச் சம்பவத்துடன் தொடர்புடைய இராணுவச் சிப் பாய்க்கே இவ்வாறு இரண்டு வருடச்சிறைத் தண்டனை விதிக்கப்பட்டது.

இத்தண்டனையை யாழ். நீதிமன்றத்தில் வைத்து மேலதிக நீதவான் திருமதி ஸ்ரீநிதிநந்தசேகரம் கடந்த வியாழனன்று விதித்தார்.

மேற்படி சம்பவம் தொடர்பான வழக்கில் இராணுவச் சிப்பாய் மீதான குற்றச்சாட்டு நிரூபிக்கப்பட்டதைத் தொடர்ந்தே இத்தண்டனை விதிக்கப்பட்டது. (32)

# சிறிலங்காவில் இரு அரசாங்கங்களா? தெளிவுபடுத்த ஐ.தே.க வேண்டுகை

(கொழும்பு)

சிறிலங்காவில் மகிந்த ராஜபக்ஷவும், சந்திரிகாவும் தனித்தனி அரசுகளையா நடத்துகிறீர்கள்? என்று ஐக்கிய தேசியக் கட்சி கேள்வி எழுப்பியுள்ளது.

இது தொடர்பாக சனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவுக்கு ஐக்கிய தேசியக்கட்சியின் பிரதித் தலைவர் கருஜெயசூரிய எழுதியுள்ள கடிதத்தில்,

வடக்குக் கிழக்குப் பிரச்சினைக்குக் கூட்டாட்சி அமைப்பின் மூலமே தீர்வுகாண முடியும் என்று உங்கள் தலைமையிலான அரசாங்கம் எடுத்த முடிவு தற்போது பிரதமரால் நிராகரிக்கப்பட்டுள்ளது.

அதேபோல் நோர்வே அனுசரணையுடன் உருவாக்கப்பட்ட ஆழிப்பேரலை மீளமைப்புக்கான பொதுக்கட்டமைப்பையும் பிரதமர் நிராகரித்துள்ளார்.

அமைச்சரவையாலும், பாராளுமன்றத்தாலும் இவை ஏற்கப்பட்டு மக்களுக்கும் சர்வதேச சமூகத்திற்கும் தெரிவிக்கப்பட்ட பின்பு தற்போது இந்த இரண்டு விடயங்களிலும் பிரதமர் மகிந்த ராஜபக்ஷ எதிர் நிலை மேற்கொண்டுள்ளார்.

ஐக்கிய இலங்கைக்குள் இலங்கையின் மூவின மக்களும் சம உரிமையோடு வாழ ஒஸ்லோ, டோக்கியோ பிரகடனங்கள் அடிப்படையில் முயற்சிகள் மேற்கொள்ளப்படும் என்று கூறி வந்தீர்கள். இதைத்தான் ஐக்கிய நாடுகள் சபையிலும் நீங்கள் பேசியுள்ளீர்கள். ஆனால் பிரதமர் மகிந்தராஜபக்ஷ இதை நிராகரித்துள்ளார். சிறிலங்காவில் இப்போது உங்கள் தலைமையில் ஒரு அரசாங்கமும், மகிந்த தலைமையில் ஒரு அரசாங்கமுமாக இருவேறு அரசாங்கங்கள் செயற்படுகிறனவா? என்றுமக்கள் கேள்வி எழுப்பியுள்ளார்கள். ஐக்கிய தேசியக் கட்சியும் அவ்வாறே சந்தேகம் கொள்கிறது.

ஜே.வி.பி.யுடன் பிரதமர் மகிந்தராஜபக்ஷ மேற்கொண்டுள்ள ஒப்பந்தங்கள் உங்கள் அரசாங்கத்தின் நிலைப்பாட்டுடன் மோதல் போக்கைக் கடைப்பிடிப்பதாக உள்ளது.

அமைதி முயற்சிகள், ஆழிப்பேரலை மீளமைப்பு உள்ளிட்ட விடயங்களில் சிறிலங்கா அரசாங்கம், சிறிலங்கா சுதந்திரக்கட்சி, ஆளும் பொதுசன ஐக்கிய முன்னணி ஆகியவற்றின் தலைவராக இருக்கும் உங்கள் நிலை என்ன என்பதை நாட்டு மக்களுக்கு நீங்கள் தெளிவுபடுத்த வேண்டும். இது அவசியத் தேவையாகும்.

நாட்டின் பிரதமராக உள்ள மகிந்த ராஜபக்ஷ, சிங்களத் தீவிரவாதிகளுடன் தனியே ஒப்பந்தம் ஒன்றை மேற்கொண்டு யுத்த நடவடிக்கைகளைத் தொடங்கியிருக்கிறார். இதன் மூலம் ஆயிரக்கணக்கான அப்பாவிகளின் உயிர்கள் பலியாகக் கூடும். இந்தச் சூழலில் உங்கள் நிலையை நீங்கள் தெளிவுபடுத்த வேண்டியது அவசியம்என்று ஜெயசூரிய அக்கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.

# சனாதிபதி, பாராளுமன்றத் தேர்தல்களை ஒரே நாளில் நடாத்த தயார்!

## தேர்தல் ஆணையாளர் அறிவிப்பு

(கொழும்பு)

சனாதிபதித் தேர்தல், பாராளுமன்றத் தேர்தல் ஆகிய இரண்டையும் ஒன்றாக நடாத்தத் தேர்தல் திணைக்களம் தயாராகவுள்ளது என சிறிலங்காவின் தேர்தல் ஆணையாளர் தயானந்த திசாநாயக்க தெரிவித்துள்ளார்.

தேர்தல் செயலகத்தில் நேற்றுமுன்தினம் காலை நடைபெற்ற ஊடக மாநாட்டில் இந்தக் கருத்தை அவர் வெளியிட்டார்.

எதிர்வரும் நவம்பர் மாதம் 17 ஆம் திகதி நடைபெறும் சனாதிபதித் தேர்தலின் போது வாக்கு மோசடிகள் இடம்பெற்றால் நவம்பர் 19 ஆம் திகதி குறித்த வாக்குச் சாவடிகளில் மறுவாக்குப் பதிவு நடத்தப்படுமென அவர் தெரிவித்தார்.

கடந்த பொதுத்தேர்தலை காட்டிலும் இந்த சனாதிபதித் தேர்தலில் நான்கு இலட்சத்து 28 ஆயிரத்து 128 பேர் மேலதிகமாக வாக்களிக்கத் தகுதி பெற்றுள்ளனர்.

வடக்கு கிழக்கு மாகாணத்தில் கொத்தணி வாக்குச்சாவடிகள் அமைக்கப்பட்டு தமிழீழ விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதி வாக்காளர்களுக்கான வசதிகள் செய்து கொடுக்கப்படவுள்ளன.

போர் நிறுத்த உடன்படிக்கையின் பின்னர் படையினர் சீருடையுடன் தமிழீழ விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டு பகுதிகளுக்குச் செல்ல முடியாது என்பதன் காரணமாகவே இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளது என அவர் தெரிவித்தார்.

எனினும் வாக்குச் சாவடிகளை அமைக்கும் பணிகள் தொடர்பில் தமக்கு தீர்மானம் எடுக்க முடியாது எனக் குறிப்பிட்ட அவர், பாதுகாப்பு படையினரும் தேர்தல் தெரிவத்தாட்சி அலுவலர்களுமே அதனைத் தீர்மானிப்பர் என தேர்தல் ஆணையாளர் குறிப்பிட்டார்.

இந்த நிலையில் வாக்களிப்பதற்கான அடையாளத்திற்காக அடையாள அட்டைகள் கட்டாயப்படுத்தப்படுமா என்பது குறித்து தமக்கு தெரியாது என அவர் தெரிவித்தார்.

# ஐ.தே.கவின் கொள்கைப் பிரகடனம் அடுத்த வாரம் வெளியிடத் தீர்மானம்

(கொழும்பு)


சனாதிபதித் தேர்தலுக்கான கொள்கைப் பிரகடனம் அடுத்த வாரம் வெளியிடப்பட இருப்பதாக ஐக்கிய தேசியக் கட்சி தெரிவித்துள்ளது. கொள்கைப் பிரகடனத்தை தயாரிப்பதற்காக பொதுமக்கள், தொழிற்சங்க பிரதிநிதிகள், அமைப்புகளின் பிரதிநிதிகள் ஆகியோருடன் பேச்சு வார்த்தை நடைபெற்று வருவதாக கட்சியின் துணைப் பொதுச் செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்க தெரிவித்துள்ளார்.

நாட்டின் சமாதான முன்னெடுப்புக்கள், போர் நிறுத்த ஒப்பந்தம், வேலை இல்லாப் பிரச்சினையைத் தீர்த்தல் உட்பட பல விடயங்கள் கொள்கைப் பிரகடனத்தில் உள்ளடக்கப்பட இருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது

# ஓயாத அலைகள்—02 கிளிநொச்சி மீட்பு நடந்ததெவ்வாறு?

**இ.சசிக்குமார்**

ஓயாத அலைகள்-02 நடவடிக்கையின் போது அணியொன்றுக்கு பொறுப்பாக நின்று வேவு நடவடிக்கையில் ஈடுபட்ட சிறப்பு வேவுப் பிரிவு போராளியான சுரேந்திரன்/ அல்லது இளம்பரிதி எனும் போராளி தனது வேவு அனுபவத்தை இவ்வாறு பகிர்ந்து கொண்டார். கட்டளைத் தளபதி ஜெயம் அண்ணாவும் வேவுப்பகுதிக்கு பொறுப்பாக நின்ற ஜெரி அண்ணாவும் நாம் வேவுபார்க்க வேண்டிய பகுதிகளை விளங்கப்படுத்தி. என்னோடு நான்கு போராளிகளையும் சேர்த்து செயற் பாட்டில் ஈடுபடுத்தினார்கள். குறித்த பகுதியில் பாதையமைத்து கொடுக்க வேண்டிய பொறுப்பு என்னிடமிருந்தது. குறிப்பிட்ட நாட்களுக்குள் அந்தப் பகுதியால் பாதை எடுக்க வேண்டுமென்று சொல்லப்பட்டிருந்தது. அதன்படி சண்டை ஆரம்பிக்கும் நேரத்தில் அணிகளை நகர்த்துவதற்காக கிளிநொச்சி குளத்துக் குள்ளால் மூன்று பாதைகளை எடுத்திருந் தோம். அம் மூன்று பாதைகளும் குளத்து நீருக்குள்ளால் தான் போக வேண்டும். ஏனென்றால் ஆமியின் மண் அரண்கள் வளைந்திருந்ததால் குளத்திற்குள்ளால் பாதை எடுத்தால் இலகுவாக இருக்கும் என்பதற்காக இந்தப் பகுதியால் பாதைகளை எடுத்திருந்தோம்.




போராளி சுரேந்திரன் / இளம்பரிதி

முதல் முறையாக குளத்து நீருக்குள்ளால் சென்று பாதை எடுக்க முயற்சித்த போது நீருக்குள் இருந்த ஒரு நச்சுத்தன்மை எனது முகத்தில் தாக்கியதால் புண்கள் ஏற்பட்டு கதைக்க முடியாத நிலை ஏற்பட்டது. அதன் பிறகு சில நாட்கள் கழித்து அதனூடாகவே பாதை எடுக்க வேண்டும் என்ற நோக்கத் திற்காக சென்றேன். குளத்துக்குள் தாமரைக் கொடிகள் உடலைக் கீறிக் கிழித்தன. தண்ணீர் கூடிய பகுதிக்குள்ளால் நீந்தியும் ஏனைய பகுதிகளால் நடந்தும் சென்றுதான் பார்த்தோம். இரவு நேரத்தில் வேவு நடவடிக்கையிலும் பகல் வேளைகளில் அவதானிப்பிலும் ஈடுபட்டோம். டிப்போச் சந்தியிலிருந்து 200 மீற்றர் உள்ளே சென்றால் தான் குளத்திற்கு வரலாம் அந்தப்பகுதியால் வரும்போது ஆமி மரத்திலிருந்து குறிபார்த்து சுடுவான். இப்படி எனக்கு இரண்டுமுறை சுட்டபோது ஒருதடவை எனது தொப்பியில்பட்டது. அதேநேரம் மாலதிபடையணி போராளி ஒருவருக்கு இராணுவம் குறிபார்த்து சுட்டதில் காயமடைந்தார். நாங்கள் மூவிங்பங் கருக்குள்ளால் சென்றுதான் குளத்துக்குள் வருவோம் இவ்வாறு ஏழு நாட்களுக்குள்



பாதைகளை எடுத்தோம். இரவில் மண் அரணில் ஏறிப்படுத்து அவதானித்துக் கொண்டிருக்கும் போது இராணுவத்தினர் ரோந்து செல்வதை காணக்கூடியதாக இருந்தது. பகல்வேளையிலும் மண் அரண் பகுதியில் தடயங்கள் இருக்கின்றதா என அவதானித்தவாறு ரோந்து செய்வதை நாங்கள் தூரத்திலிருந்து அவதானித்தோம். எதிரியின் அரணில் இருந்து சிறிய இடைவெளியில் தண்ணிக்கு இடையில் பற்றை ஒன்று இருந்தது. அதற்குள் மூன்றுநாட்களாக பகல்வேளையில் இரண்டு பேர் நின்று எதிரி எவ்வாறு நிலையெடுத்திருக்கின்றான் அவனது நடமாட்டங்கள் எவ்வாறு இருந்தது என்றெல்லாம் அவதானித்தோம். அத்தோடு எதிரியின் காப் பரணுக்கு மிக அண்மையாக நின்றுதான் நாங்கள் அவதானித்தோம். ஒவ்வொரு காப்பரண்களுக்கும் இடையில் 35 மீற்றர் இடைவெளிகளே இருந்தன. இராணுவத்தின் பிரதான முகாமான கிளிநொச்சி மகாவித்தியாலய முகாமை கைப்பற்றினால் ஏனைய பகுதிகளை கைப்பற்ற இலகுவாக இருக்கும் என்பதற்காகவும் அதிலிருந்து ஏனைய பகுதிகளுக்கான விநியோகத்தை தடைசெய்ய வேண்டுமென்பதற்காகவுமே இந்த குளத்துப்பகுதி பாதையை தெரிவுசெய்தோம். ஒன்பது நாட்களுக்குள் வேலைகளை முடித்துவிட்டோம். பின்பு தாக்குதல் அணித் தலைவர்களை அழைத்துச்சென்று அப்பாதைகளைக் காட்டினோம். பின்பு அந்தப்பகுதியால் உள்நுழைவதற்கான அணிகளுக்கு குறிப்பிட்ட நாட்கள் பயிற்சி வழங்கினோம். இதேபோன்று ஒரு குளத்தினை தெரிவு செய்து அந்த அமைப்பை உருவாக்கி பயிற்சியை வழங்கினோம். இவ்வாறு சண்டையை ஆரம்பிப்பதற்கான நாள் நெருங்கியதும் தளபதி தீபன் அண்ணா எங்களோடு கதைத்து தயார்படுத்தல்களை செய்தார்.

26 ஆம் திகதி இரவு சண்டை ஆரம்பிக்கப்பட விருந்தது. முதல் நாள் இரவு நாங்கள் சென்று இரவு முழுவதும் அவதானித்து விட்டு மறுநாள் பகலிலும் அவதானித்தோம். இருட்டிய பின் திரும்பி வந்து 50 பேர் கொண்ட அணியை அழைத்துக் கொண்டு தண்ணிக்குள்ளால் சென்றோம். செல்லும் போது ஆமி பரா வெளிச்சங்களை அடித்துக் கொண்டிருந்தான் நாங்கள் நீருக்குள் மறைந்துகொண்டு சென்றோம். 50பேரும் உள் நகர்ந்து சண்டை தொடங்கும் நேரத்திற்கு சென்று விட்டோம் சென்றவுடன் எதிரிக்கும் எமக்கும் இடையே ஐந்து மீற்றர் அண்மித்திருந்து கொண்டு குண்டு அடித்து சண்டையை ஆரம்பித்தோம். அப்போது துப்பாக்கிகளுக்குள் நீர் சென்றதால் அவை இயங்கவில்லை. அதனால் குண்டுகளையும் டொங்கான்களையும் பயன்படுத்தியே தாக்குதலை நடத்தினோம். தாக்குதல் ஆரம்பித்து அரை மணி நேரத்திற்குள் அதிலிருந்த ஏழு அரண்களையும் பிடித்து விட்டோம். இரண்டு ஆமி இறந்துவிட ஏனையோர் காயங்களுடன் தப்பி ஓடத் தொடங்கினார்கள். இரவு 1.30 தொடக்கம் காலை 6.00 மணிவரை இப்பகுதியை எமது கட்டுப்பாட்டுக்குள் வைத்திருந்தோம். 6.00 மணிக்குப்பின் எதிரியிடமிருந்து எதிர்ப்பு வர ஆரம்பித்தது. அந்த நேரத்தில் இரண்டுபகுதிகளாலும் எதிர்ப்பு வர 6.00 மணிதொடக்கம் 8.00 மணிவரை குண்டுகளையும் டொங்கான்களையும் அடித்து பிடித்த பகுதியை தக்க வைத்துக் கொண்டிருந்தோம். பிறகு மூன்று பகுதிகளாலும் ஆமி பெருமளவில் எதிர்த்தாக்குதலை நடத்த தொடங்கினான். இதனால் நாங்கள் பிடித்த காப்பரண்களை விட்டு பின்வாங்க வேண்டிய நிலை உருவானது. ஆமி நெருங்கி வந்து எங்களை எட்டிப்பிடிக்கும் அளவுக்கு வந்துவிட்டான். அந்த நேரம் எமது போராளிகளில் 40 பேர் வரை வீரச்சாவடைந்துவிட்டனர். அந்த அணிக்கு தலைமை தாங்கிய சித்தா மாஸ்டரும் வீரச்சாவடைந்துவிட்டார். ஏனையோருக்கும் காயம் ஏற்பட்டுவிட்டது. என்னோடு ஒன்பது பேரையும் கூட்டிக்கொண்டு ஆமியின் முகாமிற்குள் கண்டல் பகுதியினூடாக எங்களுடைய மற்றுமொரு அணியுடன் போய்ச்சேர்ந்தோம் பின்னர் அந்தப் பகுதியை அடுத்த கட்டங்களாக நடைபெற்ற சமரின் போது கைப்பற்றினோம். எனக் கூறினார்.



போராளி கலையழகன்

இதே வேளை கிளிநொச்சி படைத் தளத்தினுள் உட்புகுந்து வேவு நடவடிக் கையில் ஈடுபட்ட வேவுப் போராளி கலையழகன் தனது அனுபவத்தை இவ்வாறு பகிர்ந்து கொண்டார்.

1997 ஆம் ஆண்டு ஏழாம் மாத காலப் பகுதியில் கிளிநொச்சி இராணுவ முகாமை வேவுபார்க்குமாறு பணிக்கப்பட்டது. எனக்கு பரந்தன் பகுதியையும் உள்ளேயிருந்த முகாம்களையும் வேவு பார்க்குமாறு கூறி என்னோடு இன்னும் இரண்டு பேரும் சேர்க்கப்பட்டார்கள். நாங்கள் முகாமுக்குள் செல்வதற்காக சுட்ட தீவுப் பகுதியில் இராணுவ காப்பரண் பகுதியில் முயற்சிகளை மேற்கொண்டு உட்புக முடியாத நிலையில் திரும்பி வந்து ஒவ்வொரு பகுதியிலும் பாதை எடுப் பதற்காக முயன்று கொண்டிருந்தோம். அப் போது கண்டாவளையின் நீரேரியினூடாக உட்செல்லுமாறு கட்டளை கிடைத்தது. அதனூடாக உள்ளே நுழைந்து ஏறத்தாழ 20 கிலோமீற்றர் நகர்ந்துதான் பரந்தன் பகுதியை அடைந்தோம்.



முதல்நாள் வந்து பகல் ஆனையிறவுப் பகுதியில் தங்கிவிட்டு அடுத்தநாள் பரந்தனை நோக்கி நகர்ந்து வர நேரம் போதாமலிருந்ததால் அன்று பகலும் பரந்தனில் ஓரிடத்தில் மறைந்திருந்துவிட்டு மறுநாள்தான் வேலைசெய்ய ஆரம்பித்தோம்.

பரந்தன் சந்தியில் ஒரு முகாமும் கெமிக் கலுக்கு அருகில் ஒரு முகாமும் இருந்தது. அதேபோன்று பரந்தன் புளியடிப் பகுதியிலும் ஒரு முகாம் இருந்தது. அங்கு வேவு பார்த்தாலும் பகலில் தங்குவதற்கு இடம் இருக்கவில்லை. பற்றைகள், புல் வெளிகளெல்லாம் எரிக்கப்பட்டிருந்தன. வாய்க்கால்களின் கரைகளில் இருந்த பற்றைகளினுள்ளேயே தங்கினோம். இவ்வாறு நான்கு நாட்களாக பரந்தன் பகுதியில் எத்தனை முகாம்கள் இருக்கின்றதென்பதை பார்த்துக் கொண்டு வெளியே சென்றுவிட்டோம். பின்பு பரந்தன் பகுதியின் பிரதான முகாம்கள் இரண்டையும் வேவு பார்க்குமாறு கூறப்பட்டது. அதற்கேற்ப மீண்டும் உள்நுழைவதற்காக சுட்டதீவு பகுதியால் போக முயற்சி செய்தோம். மூன்று நாட்களாக நீருக்குள்ளிருந்து அவதானித்து பாதை எடுத்து உள்நுழைய முயன்றபோது முதலாவதாக கம்பிச் சுருள்களைத் தாண்டி சென்றோம். அடுத்து கற்களால் அரண் ஒன்று அமைக்கப்பட்டிருந்தது. கற்கள் ஒன்றன்மேல் ஒன்றாக அடுக்கி வைக்கப்பட்டிருந்தன. அதில் தட்டுப்பட்டால் கற்கள் விழக்கூடிய வாறு அமைந்திருந்தது. நாங்கள் அதற்கு மேல் ஏறிச்செல்ல வேண்டியிருந்தது. ஏறும்போது கற்கள் விழுந்தால் எதிரி வெளிச்சம் பாய்ச்சி தேடுவான். இவ்வாறு பலமுறை கற்கள் விழ அவற்றை எடுத்து அடுக்கிவிட்டு ஒருவரை ஒருவர் தூக்கித்தான் அடுத்த பக்கம் வைத்து ஒவ்வொருவராக ஏறிக் கடந்தோம். உள்ளே இறங்கினால் அப்பகுதி சேற்றுப்பகுதி அதனுள் இறங்க கடுமையான துர்நாற்றம் வீசியது. அதையும் சகித்துக்கொண்டு வந்து ஆனையிறவுப் பகுதியில் அன்று பகல் தங்கினோம். அடுத்தநாள் இரவு நேரடியாக பரந்தன் பகுதிக்கு வந்து முகாம்களைப் பார்க்கத் தொடங்கினோம். அந்த முகாம்களை சுற்றி இருந்த காவல் அரண்களை அவதானித்தோம். பின் முகாமின் சுற்றளவையும் எடுத் தோம். இவ்வாறு செயற்பட்டுக் கொண்டிருந்த போது நான்கு நாட்களுக்குப் பின்பு எமக்கு குடிநீர் உணவுகள் எல்லாம் முடிந்து விட்டன. நீரை நாங்கள் கெமிக்கலுக்கு முன் உள்ள கோயில் கிணற்றில் எடுத்துக் கொள்வோம். ஆனால் உணவு இல்லாததால் அடுத்தநாள் அந்தகட்ட வேலையை முடித்துக்கொண்டு வெளியே சென்று பின் அடுத்த கட்ட வேலைக்காக உள்ளே வந்தோம். உள்நுழைந்து பரந்தனை நோக்கி நடந்து வரும்போது அதிகாலை மூன்று மணியாகிவிட்டது. அதனால் இராணுவ காப்பரணுக்கு சிறிது தூரத்தில் இருந்த ஒரு சிறிய பற்றைக்குள் படுத் துக் கொண்டோம். விடிந்தவுடன் எதிரி தேடுதலை ஆரம்பித்தான். பரவலாக தேடுதலை நடத்தத் தொடங்கி னான். அப்போது 'நாங்கள் இருந்த பற்றையை நோக்கி ஒரு ஆமி வேகமாக வந்துகொண்டிருந்தான். மிக அண்மையில் வந்து நின்று சிறிது நேரம்

(ஒன்பதாம்பக்கம் பார்க்க)

# தமிழீழ வைப்பகம்

## பணிநிலை வேண்டுகை

தமிழீழ வைப்பகத்தினால் கீழ்க்காட்டப்படும் பணிநிலைக்கு தகுதியானவர் களிடமிருந்து வேண்டுகைகள் கோரப்படுகின்றன.

*பணிநிலை:–* ஊர்தி ஓட்டுநர் தரம் -03

*தகைமைகள்:–* 01. க.பொ.த (சா/த) தேர்வில் ஆகக்குறைந்தது 04 பாடங்களில் தேர்ச்சியடைந்திருத்தல் வேண்டும்.

02. ஊர்தி ஓட்டுநர் அனுமதிப்பத்திரம்உடையவராக இருத்தல் வேண்டும்.

03. ஆண்பாலார் மட்டும்.

*அகவை எல்லை:–* 25-35 வருடங்கள்.

*மாதாந்த ஊதிய அளவுத்திட்டம்:–* 3,310-4,510 + 6,000
60 ❖ 20

மேற்காட்டப்பட்ட பணிநிலைக்கு தகுதியானவர்கள் தம்மால் தயாரிக்கப்பட்ட சுயவிளக்கங்களுடனும் கீழ்க்காட்டப்படும் ஆவணங்களுடனும் இரத்தினம் மேல்மாடி, யாழ்சாலை, கிளிநொச்சியில் அமைந்துள்ள தமிழீழ வைப்பக நடுவப்பணியக மனிதவளப்பகுதிக்கு 27.09.2005 ஆம்நாள் செவ்வாய்க்கிழமை காலை 10.00 மணிக்கு நேரில் வருகை தருமாறு வேண்டப்படுகின்றனர்.

01. கல்வித்தகைமையை உறுதிப்படுத்தும் சான்றிதழ்கள்.
02. ஏனைய தகைமைகளை உறுதிப்படுத்தும் சான்றிதழ்கள்.
03. ஆள் அடையாளத்தை உறுதிப்படுத்தும் ஆவணங்கள்.
04. நற்சாட்சிப் பத்திரங்கள்.
05. ஊர்தி ஓட்டுநர் அனுமதிப்பத்திரம் (Vehicle Driving Licence)

மனிதவள மேலாளர்,
மனிதவளப்பகுதி,
நடுவப்பணியகம்,
தமிழீழ வைப்பகம்.

(சி.12836)

# ரூ.20 கோடி வெளிநாட்டு நாணயங்கள் மீட்பு!

(கொழும்பு)

சுமார் 20 கோடி ரூபா பெறுமதியான வெளிநாட்டு நாணயங்களை கட்டுநாயக்க சுங்க அதிகாரிகள் நேற்றுமுன்தினம் கைப்பற்றியுள்ளனர்.

இந்தியப் பிரஜை ஒருவரிடம் இருந்து கைப்பற்றப்பட்ட இந்த நாணயங்கள் சிங்கப்பூருக்கு எடுத்துச்செல்லப்படவிருந்ததாக உதவிசுங்கப் பணிப்பாளர் மாலி பியசேன தெரிவித்தார்.

இது தொடர்பில் தடுத்து வைக்கப்பட்டுள்ள சந்தேகநபரிடம் ஸ்ரேலிங் பவுண், யூரோ, அமெரிக்க டொலர், அவுஸ்திரேலிய டொலர் என்பன உள்ளடங்கியிருந்ததாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (32)

# காந்தரூபன் அறிவுச்சோலை சிறுவர் இல்லம்

## பணிநிலை வேண்டுகை

01. குழந்தை பராமரிப்பாளர்கள்
*(ஆண், பெண் இருபாலரும் 30 வயதிற்கு மேற்பட்டவராக இருத்தல் வேண்டும்)*

02. ஆசிரியர்கள் :-
*தமிழ், வர்த்தகம், விஞ்ஞான ஆய்வு கூடம் (விஞ்ஞானத்துறை அல்லது கணிதத்துறை) (A/L மூன்று பாடங்களில் சித்தியடைந் திருத்தல் வேண்டும்)*

03. அலுவலகம் :- கணக்குப்பதிவாளர்
*(வர்த்தகப் பிரிவில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்) எழுதுநர் தட்டெழுத்தாளர். (A/L மூன்று பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்)*

04. பண்ணையில் வேலை செய்ய ஆர்வமுடைய ஆண்,பெண் இருபாலரும்.

நேர்முகத்தேர்வு

நாள்:- 02.10.2005 (ஞாயிறு)
நேரம்:- காலை 09.மணிமுதல்
இடம்:- நிர்வாகச்செயலகம்,
காந்தரூபன் அறிவுச்சோலை, கைவேலி.

குறிப்பு:- விண்ணப்பங்கள் நேர்முகத்தேர்வு அன்றே பெறப்படும். அனைத்துத் தகைமைச் சான்றிதழ்களுடன் சமுகம் தரவும்.

நிர்வாகி,
காந்தரூபன் அறிவுச்சோலை.

(6617)




யாழ்ப்பாணத்தில் செப்ரெம்பர்-30
பொங்குதமிழ் 2005 எழுச்சி நிகழ்வு
சமாதானத்தின் பெயரால் முடக்கப்பட்டுள்ள எமது சுதந்திர தாகத்தை அமைதி என்ற பெயரால் அடக்கிவிட முடியாது. புகையைக் கக்கும் எரிமலை கூட ஒருநாள் வெடித்தெழும் தமிழர் நாமும் பொறுமையின் விளிம்பிலே நிற்கின்றோம். எமது இனத்தின் எழுச்சியை விடுதலையின் தேவையை உலகின் முன்னால் உரக்கச் சொல்லும் விடுதலையின் புரட்சியே.
நடைமுறையில் உள்ள தமிழீழ தனியரசை அங்கீகரித்து எமது தேசியம் கௌரவமான தமிழ் இனத்தின் வாழ்வை சர்வதேச சமூகமே உறுதிசெய்யக் கோரி அணிவகுப்போம் அலைகடலாய்.
இது விடியலின் நேரம். இமைகளை எரித்து விழிகளைத் திறப்போம் விரைவோம் விடுதலை வேண்டி.
காலம்-30-09-2005
இடம்-யாழ் மருத்துவபீட மைதானம்
நேரம்-பி.ப.3.00 மணி
தெல்லிப்பழை பலநோக்கு கூட்டுறவுச் சங்கம்,
தெல்லிப்பழை.
(சு.12903)


தமிழ்தேசியப் பிரகடனத்துக்கு வலுச்சேர்க்கும்
மன்னார் மக்களின் மாபெரும் எழுச்சி நாள்
ஊரெல்லாம் நாம் கூடி
உரைக்கின்றோம் 'தமிழீழம்'
வேற்றான் எமையாள
விடுவதா வீரர்கள் நாம்
மாற்றான் படை எதிர்த்து
மரணத்தில் வாழ்வுபெற்ற
போர்ப் புலிகள் வாழ்ந்த மண்ணில்-நாம்
மண்டியிட்டு வாழ்வோமா
எழுந்திடுவோம் விடுதலைக்காய்
ஏற்றிடுவோம் புலிக்கொடியை
சர்வதேசத்திடம் ஒருமித்த குரல்கொடுப்போம்
காலம்-28-09-2005
இடம்-பொதுவிளையாட்டு மைதானம் மன்னார்.
நேரம்-பி.ப.3.00 மணி
☆தமிழ் தேசிய எழுச்சி மாநாட்டுக்குழு -மன்னார்
☆தேசிய எழுச்சி பேரவை-மன்னார்.
☆அன்னையர் முன்னணி மன்னார்.
☆மாணவர் ஒன்றியம்-மன்னார்.

# விலை மதிக்க முடியா உயிர்க் கொடையால் உருவாகப் போகும் - தமிழீழம்




உலகின் போராட்ட வடிவத்திற்கு முன்னால்
விலை மதிக்க முடியாத
வரலாற்று புத்தகம்-திலீபன்

இந்திய அரசின் திட்டமிட்ட
படையெடுப்பை அவன் கண்டான்
அமைதிப் படையென்று -அடக்கமான
சொற்தொடரால் அழைக்கும்
உலகின் முடிவுகளுக்கு -முடிவு கட்ட
திலீபன் தயாரானான்

நீதி கோரி தமிழ் இனம்
காந்தியின் தேசத்தின் முன்னால்
ஒரு தர்ம யுத்தத்தை தொடங்கியது.
நயவஞ்சக இந்திய அரசோ-அவன்
மன உறுதியை மலிவாக கணக்கிட்டது.
ஈழத்தின் கரிகாலன் மரபில்-சாவுக்கே
உயிர் கொடுக்கத் துணிந்தான் திலீபன்

நல்லூரில் தமிழ் இனத்தின்
உரிமைக்கான யாகம் தொடங்கியது.
இந்திய அரசின் ஒப்பந்த காகிதங்களின்
உறுதி மொழிகளுக்கு அமைவாக
ஐந்தம்சக் கோரிக்கையை அவன் முன்வைத்தான்

நாட்கள் ஒன்றோடு ஒன்று
முந்தத் தொடங்கின - பாரதம் பார்த்திருக்க
வீரத்தின் வாசலை நோக்கி -திலீபன்
வாழ்வோடு போராடினான்

தலைவர் மீதும் மக்கள் மீதும்
கொண்ட வற்றாத பற்றுடன்
தியாகி திலீபன் கண்களை மூடினான்
புலி எடுக்கின்ற முடிவில் இறுதி
நிமிடம் வரை மாற்றம் இல்லை என
திலீபனின் மரணத்தின் மூலம்-உணர்ந்தது இந்தியா

அந்தப் புரட்சி வீரனின் பதினெட்டாவது ஆண்டில்
அவன் நினைவுகளோடு.
தமிழீழத்தின் வாசற்படிகளில்
தமிழீழ மக்கள்.

**ஆன்சிலின்**





தியாகதீபம் லெப்.கேணல் திலீபனின் 18ஆவது ஆண்டு நினைவு நிகழ்வின் இறுதி மூன்று நாள் நிகழ்வுகளின் முதல் நாள் உண்ணாவிரத நிகழ்வுகள் நேற்று கிளிநொச்சி கரைச்சி பிரதேசசபை வளாகத்தில் நடைபெற்றபோது தியாகி திலீபனின் திருவுருவப்படத்திற்கு கிளிநொச்சி பிரதேசதேசிய எழுச்சிப்பேரவை செயலர் நா.வேலாயுதம் மலர்மாலை அணிவிப்பதையும் உண்ணாவிரதத்தில் கலந்து கொண்டோரில் ஒருபகுதியினரையும் படங்களில் காணலாம். (படங்கள்:-சோதி)

## தியாகி திலீபனை நினைவு கூர்ந்து தமிழர் தாயகத்தில் நிகழ்வுகள்

தியாகி திலீபனின் 18 ஆம் ஆண்டு நினைவு தினத்தை முன்னிட்டு அவரது தியாகத்தை நினைவு கூரும் முகமாக தமிழர் தாயகப் பிரதேசங்கள் எங்கும் பல்வேறு சமூகநலப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இதனடிப் படையில் கடந்த 17 ஆம் திகதி முழங்காவில் பிரதேசத்தில் திலீபனின் 18 ஆம் ஆண்டின் 3 ஆம் நாள் நினைவாக முழங்காவில் பிரதேச அரசியல் துறைப் பொறுப்பாளர் தமிழரசன் தலைமையில் வர்த்தக சங்கத்தினராலும் 22 ஆம் திகதி அக்கராயன் வைத்திய சாலை வளாகத்தில் அக்கராயன் பலநோக்கு கூட்டுறவு சங்க பணியாளர்கள் மற்றும் அக்கராயன் கெங்காதரன் குடியிருப்பு மக்களினாலும் சிரமதானப் பணிகள் மேற்கொள்ளப்பட்டன.

மல்லாவி யோகபுரம் மகாவித்தியாலயத்தில் நேற்று முன்தினம் திலீபன் நினைவாக உண்ணாநோன்பு நிகழ்வு பாடசாலை மாணவன் சதீஸ்கரன் தலைமையில் இடம் பெற்ற அதேவேளை உயிலங்குளம் சிறார் முன்பள்ளியிலும் ஊரக தேசிய எழுச்சிப் பேரவை செயலாளர் கணபதிப்பிள்ளை தலைமையிலும் உண்ணாநோன்பு இடம் பெற்றது. இதேபோன்று மல்லாவி மாவீரர் நினைவு மண்டபத்தில் மல்லாவிப்பிரதேச புலிகளின்குரல் வானொலி மன்றத் தலைவர் தலைமையில் திலீபன் நினைவு நிகழ்வு அனுஷ்டிக்கப்பட்டது. மாங்குளம் பிரதேசத்திலும் தமிழீழ காவல் துறையினராலும் மக்களினாலும் தியாகி திலீபனின் நினைவுநாள் நிகழ்வுகள் அனுஷ்டிக்கப்பட்டதுடன் காவல் பணிமனை வளாகத்தில் பயன்தரு மரக்கன்றுகள் அப்பிர தேச பொதுமக்கள் மற்றும் மாணவர்களினால் நாட்டப்பட்டன. நெடுங்கேணி சேனைப்புலவு கிராமத்திலும் திலீபன் நினைவு நிகழ்வுகள் அனுஷ்டிக்கப்பட்டன. அத்தோடு கட்டைக்காடு றோமன் கத்தோலிக்க தமிழ் கலவன் பாடசாலையில் ஆழியவளை தியாக தீபம் திலீபன் மருத்துவ சேவையினரால் சிறப்பு மருத்துவ முகாம் ஒன்று செல்வி உமாரஞ்சனி தலைமையில் இடம்பெற்றுள்ளது. மன்னாரில் பொதுவான பல இடங்களிலும் திலீப னின் நினைவு நிகழ்வுகள் அனுஷ்டிக்கப்பட்டு வருவதோடு அவரது நினைவாக சிரமதானப் பணிகளும் இடம்பெற்று வருகின்றன. நாளை நடைபெறும் இறுதிநாள் நிகழ்வு மிகவும் எழுச்சி பூர்வமாக இடம்பெறவுள்ளது.

திலீபனின் ஒன்பதாம் நாள் நினைவுதின நிகழ்வு நேற்று முன்தினம் மட்டக்களப்பு தாண்டியடி மாவீரர் துயிலும் இல்லத்தில் காலை 10.00 மணியளவில் மாவடி முன்மாரி அ.த.க. பாடசாலை அதிபர் வே.மகேசரெத்தினம் தலைமையில் இடம்பெற்றது. நிகழ்வில் பாடசாலை மாணவர்கள், அதிபர், ஆசிரியர்கள், பொதுமக்கள் எனப் பலரும் கலந்துகொண்டு சிறப்பித்துள்ளனர்.

இதேபோன்று ஏனைய பகுதிகளிலும் சமூக நலப் பணிகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. இவற்றில் பொதுமக்கள், மற்றும் இளைஞர்கள் உணர்வுடன் பங்கேற்று வருகின்றனர்.

## பிரதி செவ்வாய்க்கிழமைகளில் உளநலகிளினிக் சிகிச்சை

(அலுவலக செய்தியாளர்)

உளநல கிளினிக் சிகிச்சைகள் தற்போது கிளி.மாவட்ட வைத்தியசாலையில் நடைபெற்று வருகின்றது.

பிரதி செவ்வாய்க் கிழமைகளில் மாவட்ட வைத்தியசாலையில் மேற்படி கிளினிக் சிகிச்சை நடைபெற்றுவருவதுடன் மாதத்தில் 2ஆவது, 4ஆவது வெள்ளிக் கிழமைகளில் வடமாநில உளநல மருத்துவர் பேராசிரியர்தயா சோமசுந்தரம் அவர்களால் மாவட்ட வைத்தியசாலையில் வைத்து மேற்படி நோயாளர்கள் பார்வையிடப்பெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (சோ)

## சிறார்களின் கலைநிகழ்வு

தமிழர் புனர்வாழ்வுக்கழக அனுசரணையுடன் ஊரக வளர்ச்சிப் பணி நிர்வகிக்கும் சொக்கலிங்கம் சிறுவர் பூங்காவில் கடந்த வியாழன் மாலை ஆறுமணிக்கு சிறார்களின் கலைநிகழ்வு பூங்கா நிர்வாகி திருமதி விஸ்வநாதன் நிலாமதி தலைமையில் ஆரம்பமானது. ஆரம்ப நிகழ்வுகளை தொடர்ந்து தியாக தீபம் திலீபனின் திருவுருவப் படத்திற்கு பூங்காக்களின் இணைப்பாளர் அ.ஸ்ரீகுமார் சுடரேற்ற கப்டன் சொக்கலிங்கத்தின் திருவுருவப் படத்திற்கு முழங்காவில் பிரதேச பெண்கள் மேம்பாட்டுப் பொறுப்பாளர் சுட ரேற்றினார். மலர்மாலை அணிவிக்கப்பட்டதைத் தொடர்ந்து அகவணக்கம் இடம்பெற்றது. தலைமையுரையைத் தொடர்ந்து சிறுமி பவதாரணி சிவபாலனும் ஆசிரியர் திருமதி அ.அலோசியஸ் வாசும் வரவேற்புரையை வழங்கினார்கள். ஆசியுரையை அருட்சகோதரி வழங்கினார். சிறப்புரையை தமிழீழ துணை அரசியற்துறைப் பொறுப்பாளர் சோ.தங்கன் நிகழ்த்தினார்.

இந்நிகழ்வில் சிறார்களின் கலைநிகழ்வுகள், பேச்சு, கவிதை, பாட்டு, தாளலயம், நாடகம், வினாவிடை என்பன சிறப்பாக இடம்பெற்றன.

## ஓயாத அலைகள்..

சுற்றிப் பார்த்துவிட்டு குனிந்து பற்றைக்குள் நோட்டமிட்டவன் எங்களைக் கண்டு விட்டான். உடனே பதற்றமடைந்து பெரிதாக கத்திக் கொண்டு ஓடத் தொடங்கினான். நாங்கள் உடனே அந்த பற்றையிலிருந்து அடுத்த பக்கமாகப் பாய்ந்து ஓட அந்தப் பகுதியால் வந்த ஆறு இராணுவத்தினரும் எங்களைக் கண்டவுடன் ஓடத் தொடங்கினார்கள். பிறகு எங்களை நோக்கி சுட ஆரம்பித்தார்கள். நாங்களும் பதிலுக்கு சுட்டுக் கொண்டே ஓடி சிறிய வெளியைக் கடந்து சென்றபோது அடுத்த பகுதியில் குழுவாக நின்ற இராணுவத்தினர் எங்களை கண்டு விட்டார்கள். அவர்கள் எங்களையும் இராணுவம் என நினைத்து கிட்டே வருமாறு கையசைத்தனர். நாங்கள் இந்தப் பக்கமாக வருமாறு சைகை செய்துகொண்டு ஓடி தொடர் காட்டுப் பகுதியொன்றினுள் சென்று நடக்கத் தொடங்கினோம். அப்போது எங்களது தண்ணீர்க் கான்களும் விடுபட்டு விட்டன. நீர்த்தாகம் ஒருபுறமிருக்க கால்களிலிருந்த செருப்பும் விடுபட்டதால் முட்கள் குத்தியதோடு கடுமையான வெய்யில் காலமாகையால் கால்களில் கொப்புளங்களும் ஏற்பட்டு விட்டன. இதற்கிடையில் எங்களுக்கு முதல் உள்நுழைந்த ஒரு அணியும் எதிரியின் தாக்குதலுக்கு இலக்காகி இருவர் வெளியே சென்று விட்டனர். இரண்டு பேர் உள்ளே நிற்பதாக முன்னரே அறிந்திருந்தோம் அன்று நாங்கள் வெளியே தொடர்பு கொண்டபோது உள்ளே நின்ற அந்த இருவரிலும் ஒருவர் வீரச்சாவடைந்து விட்டார் என்பதையும் மற்றவர் தனித்து நிற்பதையும் அறிந்தோம். அவரை எங்களோடு இணைக்குமாறும் வெளியிலிருந்து கட்டளை கிடைத்தது. அவரை எங்கு சந்திப்பதென்ற தகவலும் தரப்பட்டது. அதன்படி அங்கு சென்று பதுங்கியிருந்தோம். அப்போது எமக்கு அருகால் மூன்று இராணுவத்தினர் வந்து நின்று சுற்றிப் பார்த்துவிட்டு சென்றுவிட்டார்கள். பிறகு சிறிது நேரம் கழித்து ஒருவர் வந்து தனது தோல்பையை கழற்றி வைத்து விட்டு கீழே அமர்ந்தார். நாங்கள் அவரை அவதானித்தபோது அவர்தான் நாங்கள் தேடிவந்த போராளி என அடையாளம் கண்டுகொண்டு அவரையும் எங்களோடு இணைத்துக்கொண்டோம். அவரும் குடிநீரோ உணவோ இல்லாத நிலையில் சோர்வடைந்திருந்ததோடு உப்பு நீரை குடித்ததால் வயிற்றோட்டத்தாலும் பாதிக்கப்பட்டிருந்தார். இதேவேளை எங்களோடு வந்த ஒருவருக்கும் வயிற்றோட்டம் ஏற்பட்டது. இதனால் நாங்கள் வேலையை செய்ய முடியாமல் திரும்பி வெளியே வந்து விட்டோம். இதற்குப்பிறகு அடுத்தடுத்த சில நகர்வுகளை மேற்கொண்டுதான் பரந்தன் பகுதியின் முகாம்களின் தரவுகளை எடுத்து முடித்தோம் இவ்வாறு விடுதலைப்புலிகளின் வேவு வீரர்கள் தம்மை வருத்தி பல இரவுகள் கண் விழித்து வரைந்தெடுத்த முழுமையான தரவுகள் அடங்கிய வரைபடங்களை அடியொற்றி தாக்குதல் அணிகள் நகரத் தொடங்கின. 16 கிலோ மீற்றர் சுற்றளவையும் 20 சதுரகிலோ மீற்றர் பரப்பளவையும் கொண்ட இம் முகாமில் நிலை கொண்டிருந்த சண்டை அனுபவம் மிக்க 4 பற்றாலியன் துருப்புக்களை அழித்தொழித்து நகரைக் கைப்பற்றும் நோக்குடன் முன்னரங்கநிலைகளை நோக்கி அணிகள் நகர்கின்றன. நகர்ந்து குறித்த நேரத்தில் நிலைகளை அடைந்த அணிகள் அடுத்த கட்டளைக்காக காத்திருக்கின்றன.

(தொடரும்)

## DANISH DEMINING GROUP SRILANKA

18/10 Wyman Road,
Jaffna.

Tel: +94 (0)21 222 8181
Fzx: +94 (0) 21 222 8180

# VACANCY OF GIS FIELD OFFICER

Danish Demining Group is an INGO engaged in humanitarian mine action in the North and North East provinces of Srilanka. The organization has currently 450 employees in different positions.The GIS section is expanding its activities in all operational areas The GIS section where You will be located is using the national IMSMA geo-database. As an enhancement,the Geo-database will contain data on clearance activities and survey data from households in the close vicinity of our operations.

**Your main task will be following**

- To update and maintain the data in the geo-database.
- perform data acquisition in the field.
- Assist GIS officer with any task related to the geo-database.
- Perform spatial analysis on data in our geo-database
- Assist all staff with updated map material ,sketch maps and progress maps
- Assist with IT support to Jaffna HQ.

**Preferably you must have experience with some of these technologies:**

- ArcGIS 8.X/9.1& ArcEditor 8.X/9 (ESRI)
- Arcpad 6.0 & Arc pad Application builder (ESRI)
- MS Access, MS office.
- Field data acquisition using DGPS technology.
- Cadastral survey methodology.

You should be willing to live in Jaffna,where we have the Operational HQ and you need to make frequent traveling to other operational areas in Vanni and Trincomalee. You should be fluent in Tamil and Sinhala,and you have a working knowledge in English. Applications from Degree holders in Surveying or Geography are highly appreciated.

We are looking for two persons.Your title will depend on your Qualifications,as will your initial salary level.The initial contract will be for half a year,but the GIS section is expected to remain in work for at least two years,so there is a definite option to stay longer with the organization. if you have any questions,feel free to contact our operations manager on e mail.

please submit your application before september 30th to following e-mail opmanager@ddg.lk or postal address; operations Manager,Danish Demining Group,18/10 wyman Road, Jaffna

(சி-12868)


# இந்தியாவில் தீவிரவாதத்தை ஒழிக்க 'பொடோ' சட்டத்தை அமுல் படுத்த வேண்டும்

## - பாரதிய ஜனதா கூட்டத்தில் தீர்மானம்

(சென்னை)

தீவிரவாதத்தை ஒழிக்க மீண்டும் "பொடோ" சட்டத்தை கொண்டுவர வேண்டும் என்று பாரதிய ஜனதா கட்சியின் தேசிய செயற்குழு கூட்டத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

சென்னையில் நடந்த பாரதிய ஜனதா தேசிய செயற்குழுவின் மூன்றாம் நாள் கூட்டத்தில் உள்நாட்டு பாதுகாப்பு தொடர்பான தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.இந்த தீர்மானம் தொடர்பாக கட்சியின் அகில இந்திய பொதுச்செயலாளர்பிரமோத்மகாஜன் செய்தியாளர்களிடம் தெரிவிக்கையில்;

உள்நாட்டு பாதுகாப்பு தொடர்பான இந்தத் தீர்மானம் மூன்று பிரிவுகளாக பிரிக்கப்பட்டு கூட்டத்தில் விவாதிக்கப்பட்டது.

தீவிரவாதப்பிரச்சினை தனிப்பட்ட மாநிலப்பிரச்சினையல்ல இது தேசியப் பிரச்சினையாகும். சட்ட விரோதமாக இந்தியாவுக்குள் இரண்டு கோடி பேர் ஊடுருவியுள்ளனர்.

இந்தியாவின் அண்டை நாடுகளிலிருந்து அசாம், மேற்கு வங்காளம் போன்ற மாநிலங்களுக்கு அதிக அளவில்சட்ட விரோதமாக ஊடுருவுகின்ற வெளிநாட்டவர்களின் பிரச்சினை தொடர்பான நீதிமன்றத் தீர்ப்பை நடைமுறைப்படுத்த வேண்டும் ஊடுருவுகின்ற மக்களை அகதிகளாகத் தான் கருதவேண்டும்.

ஊடுருவி இந்தியாவில் தங்கி இருப்பவர்களுக்கு வாக்குரிமை வழங்கப்பட்டுள்ளது. இதைக்கண்டு பிடித்து அவர்களுக்கான வாக்குரிமையை இரத்து செய்யவேண்டும்.

இந்தியாவின் எல்லையோர மாவட்டங்களில் வசிப்பவர்களுக்கு அடையாள அட்டை வழங்கவேண்டும் என்று அவர் தெரிவித்தார்.



இந்திய நகரான மும்பை வீதியொன்றில் தேங்கி நிற்கும் நன்னீரை அள்ளிக்குடிக்கும் பெண்மணி ஒருவரை படத்தில் காணலாம்.




## 28 ஆவது வயதினில்...



பிறப்பு 25 – 09 – 1977

வீரச்சாவு 16 – 05 – 1997

வேவுப் படையணி

**லெப்டினன்ட் ரவி**

(நடராஜா சிவகுமார்)

வாகையடி காரைநகர்
யாழ்ப்பாணம்

"நீ கொண்ட இலட்சியம்
நிட்சயம் தலைவன் காலத்தில்
நிறைவேறும்"...

தகவல்:–சித்தப்பா குடும்பத்தினர்.
எம். நவரத்தினம்.

(சி.12923)

## அறிவித்தல்

நிவாரணம், புனர்வாழ்வளிப்பு மற்றும் நல்லிணக்க அமைச்சின் கீழ், இம்மாவட்டத்தில் பட்டதாரிப் பயிலுநராகக் கடமை புரிந்து இதுவரை நிரந்தர நியமனம் கிடைக்காத பட்டதாரிப் பயிலுநர்கள் இருப்பின் , உடனடியாக மாவட்ட செயலகத்துடன் தொடர்பு கொண்டு தங்கள் விபரங்களை 26.09.2005இற்கு முன் பதிவு செய்யுமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

தி. இராசநாயகம்
அரசாங்க அதிபர்
கிளிநொச்சி.

(சி.12922).

## வீரவணக்கம்



வீரப்பிறப்பு 12 09 1969

வீரச்சாவு 24 09 2005

**லெப்.கேணல் சுட்டா/ பிறையாளன்**

(கயஸ்ரீன் சில்வெஸ்ரர்)


8ஆம் கட்டை, சாம்பலத்தீவு, திருகோணமலை.
தற்காலிக முகவரி : வள்ளிபுனம், புதுக்குடியிருப்பு.

**அறிவுக்கூடத்தின் தாயாய் நின்று
அன்போடு அரவணைத்தவனே!
உரிமைப் போரில் உன் பணி முடித்தாயோ!
உன் கனவு சுமந்து விடியலுக்காய்
விரைகின்றோம்.**

24-09-2005 அன்று சுகயீனம் காரணமாகச் சாவடைந்த லெப்.கேணல் சுட்டா/ பிறையாளன் அவர்களுக்கு எமது வீரவணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

லெப்.கேணல் நவம் அறிவுக்கூடப் போராளிகள்,
ஆசிரியர்கள், பணியாளர்கள்

(சி.12878)



# மேஜர் துளசி ஞாபகார்த்த மென்பந்துப் போட்டி இறுதிப் போட்டியில் தோழர்கள் - இளந்தாரகை அணிகள்

நியூஸ்ரார் விளையாட்டுக்கழகம் கிளி.மாவட்ட விளையாட்டுத் துறை யின் ஆதரவுடன் நடாத்தும் மேஜர் துளசி ஞாபகார்த்த மென்பந்து துடுப்பாட்டப் போட்டியின் இறுதிப் போட்டி இன்று நடைபெறவுள்ளது.

இவ் இறுதிப் போட்டிக்கு தருமபுரம் இளந்தாரகை விளை யாட்டுக்கழகமும், விசுவமடு தோழர்கள் விளையாட்டுக்கழகமும் தெரிவாகியுள்ளன.

முன்னதாக நேற்று நடைபெற்ற காலிறுதிப் போட்டியில் ஜொலிஸ்ரார் வி. கழகத்தை எதிர்த்து தூயதமிழ் வி.கழகம் மோதியது. நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்று முதலில் ஆடிய ஜொலிஸ்ரார் வி.கழகம் 11.2 ஓவர்களில் அனைத்து விக்கெட்டுக் களையும், இழந்து 79 ஓட்டங்களைப் பெற்றது. துடுப்பாட்டத்தில் ரவிக்குமார் 21 ஓட்டங்களையும், சிறிகரன் 16 ஓட்டங்களையும் அதிகபட்சமாகப் பெற்றனர். பந்து வீச்சில் திவாகர் ஐந்து விக் கெட்டுக்களைக் கைப்பற்றினார்.

பதிலுக்கு வெற்றியிலக்கு நோக்கி ஆடிய தூயதமிழ் வி.கழகம் 12.4 ஓவர் நிறைவில் அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்து 63 ஓட்டங்களைப் பெற்றுத் தோல்வியைத் தழுவியது. துடுப்பாட்டத்தில் செந்தூரன் ஏழு ஓட்டங்களையும், அன்ரனிதாஸ் எட்டு ஓட்டங்களையும் அதிகபட்சமாகப் பெற்றனர். பந்து வீச்சில் சதீஸ்குமார் நான்கு விக்கெட்டுக்களைக் கைப்பற்றினார்.

அடுத்து நடைபெற்ற காலிறுதிப் போட்டியில் சோலை ஏ வி.கழகத்தை எதிர்த்தாடிய தோழர்கள் வி.கழகம் தர்மேந்திரா மற்றும் பார்த்திபன் ஆகியோரின் சிறப்பான துடுப்பாட்டம் மற்றும் பந்து வீச்சின் மூலம் அரையிறுதிப் போட்டிக்குத் தெரிவானது.

முதலில் ஆடிய தோழர்கள் வி.கழகம் தர்மேந்திராவின் சிறப்பான துடுப்பாட்டத்தின் மூலம் நிர்ணயிக்கப்பட்ட ஓவரில் ஐந்து விக்கெட்டுக்களை இழந்து 93 ஓட்டங்களைப் பெற்றது. துடுப்பாட்டத்தில் தர்மேந்திரா 27 ஓட்டங்களையும், தினேஷ் 15 ஓட்டங்களையும் அதிக பட்சமாகப்பெற்றனர். பந்து வீச்சில் சதீஸ், அன்ரனி தலா இரண்டு விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர்.

பதிலுக்கு 94 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற நிலையில் களமிறங்கிய சோலை ஏ வி.கழகம் பார்த்திபனின் அபார பந்து வீச்சின் மூலம் 13.2 ஓவர்கள் நிறைவில் அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்து 76 ஓட்டங்களை மட்டும் பெற்று தோல்வியைத் தழுவியது. இதில் தவதீசன் 19 ஓட்டங்களையும், ரவிக்குமார் 13 ஓட்டங்களையும் அதிகபட்சமாகப் பெற்றனர். பந்து வீச்சில் பார்த்திபன் ஐந்து விக்கெட்டுக்களையும், தர்மேந்திரா, விஜயதர்சன் தலா இரண்டு விக்கெட்டுக்களையும் கைப்பற்றினர்.

அடுத்து நடைபெற்ற அரையிறுதிப் போட்டியில் மயூரனின் அபாரமான பந்து வீச்சு மற்றும் துடுப்பாட்டம் காரணமாக சென்யூட் வி.கழகத்தை இலகுவாக வெற்றி கொண்ட இளந்தாரகை வி.கழகம் இறுதிப் போட்டிக்குத் தெரிவானது.

முதலில் ஆடிய சென்யூட் வி.கழகம் நிர்ணயிக்கப்பட்ட ஓவரில் ஒன்பது விக்கெட்டுக்களை இழந்து 84 ஓட்டங்களைப் பெற்றது. இதில் ஆதி 19 ஓட்டங்களை அதிகபட்சமாகப் பெற்றார். பந்து வீச்சில் மயூரன் ஐந்து விக்கெட்டுக்களையும், பிரபு மூன்று விக்கெட்டுக்களையும் கைப்பற்றினர்.

பதிலுக்கு ஆடிய இளந்தாரகை வி.கழகம் மயூரனின் சிறப் பான துடுப்பாட்டத்தின் உதவியுடன் 12.3 ஓவர்கள் நிறைவில் இரண்டு விக்கெட்டுக்களை இழந்து வெற்றியிலக்கை அடைந்தது. துடுப்பாட்டத்தில் மயூரன் 43 ஓட்டங்களையும், யோகீசன் 13 ஓட்டங்களையும் அதிகபட்சமாகப் பெற்றனர்.

அடுத்து நடைபெற்ற அரையிறுதிப் போட்டியில் ஜொலிஸ்ரார் வி.கழகத்தை எதிர்த்தாடிய தோழர்கள் வி.கழகம் பரபரப்புக்கு மத்தியில் வெற்றி பெற்று இறுதிப் போட்டிக்குத் தெரிவானது.

முதலில் ஆடிய தோழர்கள் வி.கழகம் சுகந்தனின் சிறப்பான துடுப்பாட்டத்தின் மூலம் 14.1 ஓவர்கள் நிறைவில் அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்து 102 ஓட்டங்களைப் பெற்றது. துடுப்பாட்டத்தில் சுகந்தன் 38 ஓட்டங்களையும், உதயன் 17 ஓட்டங்களையும் அதிகபட்சமாகப் பெற்றனர். பந்து வீச்சில் சதீஸ், ரவிக்குமார் தலா மூன்று விக்கெட்டுக்களைப் பெற்றனர்.

பதிலுக்கு வெற்றியிலக்கு நோக்கி ஆடிய ஜொலிஸ்ரார் வி.கழகம் ஆரம்பம் சிறப்பானதொன்றாக அமைந்தாலும் தினேஷ் மற்றும் உதயன் ஆகியோரின் பந்து வீச்சு அவ்வணியின் வெற்றிக் கனவைக் கலைத்ததெனலாம். இறுதியில் ஒன்பது விக்கெட்டுக்களை இழந்து 96 ஓட்டங்களை மாத்திரமே பெறமுடிந்தது. துடுப்பாட்டத்தில் மதனராஜ் 21 ஓட்டங்களையும், நவிதராஜ் பத்து ஓட்டங்களையும் பெற்றனர். பந்து வீச்சில் தினேஷ் சிறப்பாகப் பந்து வீசி நான்கு விக்கெட்டுக்களைக் கைப்பற்றினார். தர்மேந்திரா இரண்டு விக்கெட்டுக்களைக் கைப்பற்றினார். இப்போட்டிக்கு நடுவர்களாக குகன், கிருஷ்ண ரூபன் கடமையாற்றினர்.



இளந்தாரகை வி.கழகம்



தோழர்கள் வி.கழகம்

## கிளி.ம.வி அணியினர் கௌரவிப்பு நாளை

அண்மையில் அதீத திறமையை வெளிப்படுத்தி வரும் கிளிநொச்சி மகாவித்தியாலய 13வயது கடினப்பந்து அணி யினர் தமிழீழ விளையாட்டுத்துறையினரால் கௌரவிக் கப்படவுள்ளனர். இந்நிகழ்வு நாளை கிளிநொச்சி மகாவித் தியாலய மண்டபத்தில் நடைபெற ஏற்பாடாகியுள்ளது.

கிளிநொச்சி மகாவித்தியாலய 13வயது கடினப்பந்து அணியினர் கடந்த வாரம் யாழ்மாவட்டத்தின் பிரபல பாடசாலை அணியினரை மட்டுப்படுத்தப்பட்ட ஓவர் போட்டிகளிலும் மற்றும் டெஸ்ட் போட்டிகளில் வெற்றி பெற்றமை குறிப்பிடத்தக்கது.







தியாகி லெப். கேணல் திலீபனின் 18ஆம் ஆண்டு நினைவு நாளை முன்னிட்டு வட்டக்கச்சிப்பிரதேச அரசியல்துறையின தும், விளையாட்டுக் குழுவினதும் ஒழுங்கு படுத்தலில் இராமநாதபுரம் மேற்கு அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலையில் நேற்று முன்தினம் நடைபெற்ற மாபெரும் விளை யாட்டு நிகழ்வுகளில் சில காட்சிகள்.

(படங்கள் : ரூபன்)




# வட்டக்கண்டல் சுடர்ஒளி வி.கழகம் நடாத்தும் கால்பந்து சுற்றுப் போட்டியின் இறுதிப்போட்டி இன்று





1985ஆம் ஆண்டு சிறிலங்கா இராணுவத் தினால் படுகொலை செய்யப்பட்ட 43பொது மக்கள், மூன்று ஆசிரியர்கள் நினைவாக மன்னார் வட்டக்கண்டல் சுடர்ஒளி வி.கழகம் நடாத்தும் மாபெரும் உதைபந்தாட்ட போட்டியின் இறுதிப் போட்டி இன்று வட்டக்கண்டல் மகாவித் தியாலய மைதானத்தில் நடைபெறுகின்றது.

மன்னார் மாவட்டத்தின் மாந்தை மேற்கை சேர்ந்த மடுநானாட்டான் பிரதேசங்களை சேர்ந்த 21 வி.கழகங்கள் பங்குபற்றுகின்றன.

நேற்று முன்தினம் ஆரம்பான மேற்படி போட்டி கள் தொடர்ந்து நேற்றும் இரண்டாம் நாளாக நடைபெற்றது.நேற்றைய போட்டியின் முதலாவது போட்டியாக சுடர் ஒளி-பி அணியினரும் இளந் தளிர் ஏ அணியினரும் பங்குபற்றினர்.

இப்போட்டிக்கு வடக்கு கிழக்கு மாகாண உதைபந்தாட்ட சம்மேளனத் தலைவரும் மன் னார் மாவட்ட உதைபந்தாட்ட சம்மேளன செய லாளருமான அன்ரன் தங்கேஸ்வரன் கலந்து கொண்டார்.

முதலாவது போட்டியில் சுடர்ஒளி வி.கழகம் பி அணியினர் 1-0என்ற கோல்கணக் கில் வெற்றிபெற்றனர்.

இரண்டாவது போட்டி இளஞ்சுடர் தட்சனா மடு-ஏ அணியினரும் சென்அன்ரனீஸ் அந் தோனியார்புரம் பி அணியினரும் மோதினர். அதில் அ.பு பி அணியினர் 1-0 என்றகோல் கணக்கில் வெற்றிபெற்றனர்.

மூன்றாவது போட்டியாக சென்தோமஸ்-ஏ அணியினருக்கும் சென்பீற்றர்ஸ்-ஏ அணியின ருக்குமான போட்டியில் சென்தோமஸ் 4-1என்ற கணக்கில் வெற்றியீட்டினர். (தீ)



நியூஸ்ரார் விளையாட்டுக்கழகம் நடாத்தும் கப்டன் இன்பராஜ் ஞாபகார்த்த பூப்பந்து போட்டிகள் நேற்று மாலை கிளி. இளையோர் செயற்பாட்டு நிறுவன பூப்பந்துத் திடலில் மின்னொளியில் நடைபெற்றது. இதில் இரட்டையர் ஆட்டத்தில் கலந்து கொண்டுள்ள பூப்பந்து வீரர்கள்...

## யாழ்.மத்திய கல்லூரி சம்பியனானது

வடக்கு-கிழக்கு மாகாண பண்பாட் டலுவல்கள் திணைக்களத்தால் யாழ். மாவட்ட பாடசாலைகள் அணிகளுக்கிடையில் நடாத்தப் பட்ட துடுப்பாட்டப் போட்டியில் யாழ். மத்திய கல்லூரி மூன்று விக்கெட்டுக்களால் வெற்றி பெற்று சம்பியனானது.

வடக்கு-கிழக்கு மாகாண கல்வி பண்பாட் டலுவல்கள் திணைக்களம் யாழ்.மாவட்ட பாடசாலை அணிகளுக்கிடையில் நடாத்திய 40 ஓவர் கொண்ட துடுப்பாட்டப் போட்டியில் இறுதியாட்டம் நேற்று முன்தினம் காலை ஒன்பது மணிக்கு சுண்ணாகம் ஸ்கந்தவரோதயாக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது.

இறுதியாட்டத்தில் யாழ்ப்பாண மத்திய கல்லூரி அணியை எதிர்த்து சென்ஜோன்ஸ் கல்லூரி அணி மோதியது.

நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற யாழ். புனித பரியோவான் கல்லூரி அணி 30.1 ஓவர் நிறைவில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 126 ஓட்டங்களைப் பெற்றுக்கொண்டது.

இதில் ஹரிசன் 28, சாருலன் 20, கிரிஷாந் 17, நிருபன் பத்து ஓட்டங்களையும் அதிகபட்ச மாகப் பெற்றுக் கொண்டனர்.

யாழ். மத்திய கல்லூரி பந்து வீச்சில் டயஸ், நவநீத் ஆகியோர் தலா மூன்று விக்கெட்டுக களையும், மயூரன் இரண்டு, வியாசன் ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினர்.

127 ஓட்டம் என்ற வெற்றியிலக்குடன் களமிறங்கிய யாழ். மத்திய கல்லூரி ஆரம்பத் துடுப்பாட்ட வீரர்களை விரைவாக இழந்த போதும் நடுவரிசை ஆட்டக்காரர்களின் நிதன மான ஆட்டத்தால் 33.4 ஓவர் நிறைவில் ஏழு விக்கெட்டுக்களை இழந்து வெற்றியிலக்கை அடைந்தது. இதில் மகிபன், செல்ரன் ஆகியோர் ஆட்டமிழக்காது 32, 26 ஓட்டங்களையும், ஜொனிசன் 17, வியாசன் 14 ஓட்டங்களை அதிக பட்ச ஓட்டங்களாகப் பெற்றனர். யாழ். புனித பரியோவான் கல்லூரியினரால் உதிரிகளாக 14 ஓட்டங்கள் விட்டுக்கொடுக்கப்பட்டது.

பந்து வீச்சில் பரியோவன் கல்லூரி சார்பாக நிருபன் மூன்று, சஞ்சீவன், நவநீதன், அச்சயன் ஆகியோர் தலா ஒரு விக்கெட்டுக்களை கைப்பற்றினர்.

யாழ். மாவட்டத்தில் வெற்றிபெற்ற அணி வடமாகாணத்திலுள்ள ஏனைய மாவட்ட அணிகளுடனான போட்டிகள் அடுத்த மாதம் யாழ். மாவட்டத்தில் நடைபெறும் என அறிவிக் கப்பட்டுள்ளது. (கீ)



### சிந்தனைக்கு

விடுதலை வீரனின் சுயநலமற்ற-பற்றற்ற-வாழ்க்கை உன்னதமானது: அர்த்தமானது. சுதந்திரம் என்ற உன்னத இலட்சியத்திற்காக, அவன் தனது உயிரையும் அர்ப்பணிக்கிறாகத் துணிகிறான்..

தமிழீழ தேசியத் தலைவர்.

ஈழநாதம்
மக்கள் நாளிதழ்
யாழ்.சாலை,கிளிநொச்சி. 25.09.2005
தொலைபேசி 060-2213244
தொலைநகல் 021-2283948
மின் அஞ்சல் natham23 ela@ yahoo.com

## புலிகள் மீது மட்டும் ஏன்?

விடுதலைப்புலிகள் சமாதான நடவடிக்கைகளில் அக்கறையுடன் பங்களிப்பு வழங்க வேண்டும். அரசியல் படுகொலைகளை நிறுத்த வேண்டும் என்பன கடந்த திங்கட்கிழமை நியூயோர்க்கில் கூடிய இலங்கைக்கு உதவி வழங்கும் நாடுகளின் இணைந்த தலைமையின் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ள சில விடயங்களில் இரண்டாகும்.

இணைந்த தலைமையின் இத்தகைய அறிவுறுத்தல்களானது சில விடயங்களில் அவர்கள் நடுநிலையான பார்வையைக் கொண் டிருக்கவில்லை என்பதையே வெளிக்காட்டுவதாக உள்ளது. ஏனெனில் விடுதலைப்புலிகள் சமாதான முயற்சிகள் பொறுத்து வெளிப்படுத்திவரும் அக்கறையும் அதற்காகச் செய்துள்ள அர்ப்பணிப்பும் தேவைக்கும், எதிர்பார்ப்புக்கும் மிகவும் அதிகமாகும்.

மூன்றரை ஆண்டுகள் கடந்துவிட்ட நிலையிலும், அரசியல்தீர்வு மக்களுக்கான புனர்வாழ்வு நடவடிக்கைகள் இரண்டிலுமே எந்தவகையிலும் சிறுமுன்னேற்றம் காணாத நிலையிலும், முன்னேற்றம் காணலாம் என்ற நம்பிக்கை கொள்ளத்தக்க சமிக்ஞைகள் எதுவுமற்ற நிலையிலும் கூட விடுதலைப்புலிகள் எவ்வேளையிலும் பேச்சுவார்த்தை நடத்தத் தயார் என்ற தீர்மானத்துடன் இருப்பதும், அதனை வெளிப்படுத்தியிருப்பதும் சமாதான முயற்சிகள் மீது அவர்கள் காட்டி வரும் அக்கறையின் வெளிப்பாடே ஆகும்.

அதிலும் குறிப்பாகச் சிறிலங்கா பிரதான அரசியல் கட்சிகள் எதிர்காலத்தில் அரசியல் தீர்விற்கான நம்பிக்கை எதையும் ஊட்டாத நிலையிலும், பௌத்த- சிங்கள பேரினவாத சக்திகள் இனப்பிரச்சினைக்கான அரசியல் தீர்வை மலினப்படுத்தி ஒற்றையாட்சி அமைப்பிற்குள்ளேயே தீர்வு என்று கூறும் நிலையிலும் விடுதலைப் புலிகள் யுத்தநிறுத்தத்தைப் பேணுதலும், சமாதான முயற்சிகளுக்கு வழங்கி வரும்ஒத்துழைப்பும் சமாதானத்திற்கான ஆதரவின் வெளிப்பாடே ஆகும்.

இந்த வகையில் விடுதலைப்புலிகள் சமாதானத்திற்கான ஆதரவு வெளிப்படுத்துகை ஒருபுறமிருக்க, அரசியல் படுகொலைகளைப் புலிகள் நிறுத்த வேண்டும் என்ற அறிவுறுத்தலானது ஒருபுறத்தில் விடுதலைப் புலிகள் மீதான உறுதிப்படுத்தப்படாததும், மறுபுறத்தில் விடுதலைப் புலிகளுக்கு ஏற்பட்டுள்ள இழப்புக்கள், பாதிப்புக்கள் என்பனவற்றைக் கவனத்திற் கொள்ளாததுமான போக்கையே காட்டுவதாயுள்ளது.

முதலில், அரசியல் படுகொலைகளை நிறுத்த வேண்டும் என்ற அறிவுறுத்தல் விடுதலைப்புலிகளை மட்டும் நோக்கி வைக்கப்படுவது ஏன்? சிறிலங்கா அரசியலில் பங்கேற்கும் அரசியல்வாதிகள், தம்மை அரசியல் வாதிகள் எனக் கூறிக் கொள்ளும் தமிழ் இன விரோதக் குழுக்களாக சிறிலங்கா இராணுவத்துடன் இணைந்து செயற்படும் துணை ஆயுதப்படைக் குழுக்களின் தலைவர்கள் இடையிடையே கொல்லப்படுவதனாலா?

சரி, அவர்கள் கொல்லப்படுவது அரசியல் படுகொலைகள் என வைத்துக்கொண்டால், யுத்தநிறுத்த உடன்பாட்டின் பிரகாரம், ஆயுதங்கள் ஏதுவுமற்று நிராயுதபாணிகளாக அரசியற் பணிக்கென இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதிக்குள் சென்று அரசியற் செயற்பாடுகளில் ஈடுபட்டவேளை படுகொலை செய்யப்பட்ட விடுதலைப் புலிகளின் அரசியற்துறைப் பொறுப்பாளர்கள், போராளிகளின் செயற்பாடுகள் அரசியல் செயற்பாடு எனக் கொள்ளத்தக்கவை இல்லையா? சிறிலங்கா அரசியல்வாதிகள், மற்றும் துணைப்படைக் குழுத்தலைவர்கள் கொல்லப்பட்டதைவிட இவர்கள் கொல்லப்பட்ட தொகை அதிகம் இல்லையா?

அது மாத்திரமன்றி, சிறிலங்கா அரசைச் சார்ந்த அரசியல் வாதிகளும் சரி, விடுதலைப்புலிகளின் அரசியல்துறையைச் சார்ந்தவர்களும் சரி, இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதியிலேயே கொலை செய்யப்பட்டுள்ளார்கள். இதில் சிறிலங்கா அரசு சார்ந்தவர்கள் கொல்லப்பட்டால் விடுதலைப்புலிகளால் கொல்லப்பட்டதாகவும், விடுதலைப்புலிகளின் அரசியல்துறையைச் சார்ந்தவர்கள் கொல்லப்பட்டால் எவ்வாறு இனந்தெரியாதவர்களால் கொல்லப்பட்டதாகவும் கருதப்படும்?.

இதற்கும் அடுத்த கட்டமாக, சிறிலங்கா அரசு தரப்பினர் கொல்லப்பட்டால், விசாரணைகள் தொடரப்படும் முன்னரே ஆதாரங்கள் எதுவும் இன்றியே விடுதலைப்புலிகளே கொன்றதாக பொலிஸ் அதிகாரிகளில் இருந்து அரசியல் தலைவர்கள் வரையில் கூறி வருகின்றனர். அதற்கேற்ப கற்பனைக் கதைகளையும் புனைந்து விடுகின்றனர். ஆனால், இத்தனைக்கும் கொல்லப்பட்ட அரசியல் வாதிக்கு தமது கட்சிக்குள்ளேயே எதிர்ப்பாளர்களும், போட்டியாளர்களும் நிரம்பவே உள்ளனர். அதிலும் தமிழ் இன விரோதக் குழுத்தலைவர்கள் எனில் உள்விரோதங்கள் நிரம்பவே உள்ளன. குறிப்பாக பெற்றுக்கொண்ட சலுகைகள், வளங்கள் என்பனவற்றைப் பங்கீடு செய்வதில் ஏற்படும் முரண்பாடுகளில் இருந்து வேறு தனிப்பட்ட காரணங்களினால் கொலைவரை செல்ல நிரம்பவே காரணங்கள் உள்ளன. இதற்கு உதாரணங்களும் உள்ளன.

இத்தனைக்கும் அரசியல் பணியில் ஈடுபடும் விடுதலைப்புலிகள் யாராவது கொல்லப்பட்டால் அவர்களைக் கொன்றது மட்டும் எவ்வாறு இனந்தெரியாதவர்கள் ஆகிவிட முடியும்?. அதிலும், சிறிலங்கா ஆயுதப்படையோ அன்றிப் புலனாய்வுத்துறையோ அன்றி அவர்களுடன் இணைந்து செயற்படும் துணைப்படையோ தவிர வேறு எவர் இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதியில் செயற்பட முடியும்? புலிகள் மீது தாக்குதல் நடத்த முடியும்? கொலை செய்ய முடியும்?

இதற்குமப்பால், வடக்கு - கிழக்கில், குறிப்பாக கிழக்கில் புலிகளின் அரசியல்துறை சார்ந்த பலர் படுகொலை செய்யப்பட்டுள்ள நிலையில், சிறிலங்கா பொலிசாரோ அன்றி புலனாய்வுத் துறையினரோ சம்பவம் தொடர்பான களநிலை அறிக்கைகளைத் தவிர விசாரணையில் இதற்கு மேல் ஒருபடிதானும் சென்றுள்ளார்களா? ஒரு விசாரணை அறிக்கை தானும் தயாரித்துள்ளார்களா? அன்றி சிறிலங்கா நீதிமன்றங்கள்தானும் இவ் விசாரணைகள் குறித்துக் கேள்வி எழுப்பியுள்ளனவா? இவற்றைத் தவிர இப்படுகொலைகள் தொடர்பான விசாரணைகளின் முன்னேற்றம் குறித்து சர்வதேச சமூகம் தானும் ஏதாவது குரல் எழுப்பி உள்ளதா?

இவை எல்லாம் கவனத்திற் கொல்லப்படாதவையாக - நீதி கேட்கப்படாதவையாக இருக்கையில் விடுதலைப்புலிகளால் மேற்கொள்ளப்பட்டதாக உறுதிப்படுத்தப்படாததும், கற்பிதத்தின் அடிப்படையிலானதுமான குற்றச்சாட்டுக்களை மட்டும் கவனத்திற்கொள்வதும், அவற்றின் அடிப்படையில் அறிவுறுத்தல்களை மேற்கொள்வதும் நடுநிலையானதும் தமிழ் மக்களுக்கு நம்பிக்கையளிப்பதுமான செயற்பாடாக இருக்கமாட்டாது.

## படையினருக்கான அனைத்து வசதிகளும் நவம்பருக்குள் செய்து கொடுக்கப்படும்

### - இராணுவத் தளபதி உறுதி

படையினருக்கான அனைத்து வசதிகளும் எதிர்வரும் நவம்பர் மாதத்திற்குள் செய்துகொடுக்கப்படும் என இராணுவத்தளபதி லெப்.ஜெனரல் சாந்தகொட்டேகொட தெரிவித்துள்ளார்.நேற்றுமுன்தினம் வெலிக்கந்த, மின்னேரியா மற்றும் மட்டக்களப்பு ஆகிய இடங்களில் உள்ள இராணுவ முகாம்களுக்கு விஜயம்செய்த அவர், அங்கு படையினருடன் கலந்துரையாடல்களை நடத்தினார்.இதன்போது கருத்துரைத்த சாந்த கொட்டேகொட, ஆயுதங்கள் உட்பட்ட இராணுவத்தினருக்கான ஆயுதங்கள் அனைத்தும் உரிய வகையில் பெற்றுக் கொடுக்கப்படும் எனக் குறிப்பிட்டார்.

கிழக்குப்பிரதேசங்களில் பொது மக்கள் மீதுபடையினர் தாக்குதல் நடத்தும்போது அதற்கு பதில் தாக்குதல்களை நடத்துவதை தவிர்க்குமாறு அவர் யோசனை தெரிவித்தார்.எனினும் வனப்பகுதிகளில் வைத்து படையினர் மீது தாக்குதல்கள் நடத்தப்படுமானால் அதற்கு பதில் தாக்குதலை நடத்துமாறும் அவர் உத்தர விட்டார்.தேர்தலின் போது அஞ்சல் வாக்குகள் செலுத்தப் படும் போது முறைகேடுகள் இடம்பெறும் வாய்ப்புகள் உள்ளதாகவும் அவர் எச்சரிக்கை விடுத்தார். (32)

## மகிந்த ராஜபக்ஷ சனாதிபதியானால் 3இலட்சத்து 10ஆயிரம் வேலை வாய்ப்புக்கள்

### வாக்குறுதியை அள்ளி வீசுகிறார் மங்களசமரவீர

(கொழும்பு)

மகிந்தராஜபக்ஷ சனாதிபதியானால் எதிர்வரும் 2006 ஆம் ஆண்டில் பொதுத்துறை நிறுவனங்களில் 20 ஆயிரம் புதிய பணியிடங்கள் உருவாக்கப்படும் வேலையற்ற பட்டதாரி இளைஞர்கள் எண்ணாயிரம் பேருக்கு வேலை வாய்ப்பளிக்கப்படும் 3,10,000 இளைஞர்களுக்கு வேலை வாய்ப் பளிக்கும் வகையிலான செயற்திட் டங்கள் மேற்கொள்ளப்படும் என கொழும்பில் மகிந்த ராஜபக்ஷவின் தேர்தல் பிரச்சார ஒருங்கிணைப் பாளர் மங்கள சமரவீர கூறியிருக்கிறார்.

அவர் மேலும் கூறுகையில்: கடந்த 2004 ஆம் ஆண்டு தேர்தலின் போது பொதுமக்கள் ஐக்கிய முன்னணி அரசாங்கம் தனது தேர்தல் அறிக்கையில்,41 ஆயிரம் வேலையற்ற பட்டதாரிகளுக்கு வேலை வாய்ப்பளிக்கப்படும் என்று உறுதிமொழி அளித் திருந்தது.

பொதுஜன ஐக்கிய முன்னணி அரசாங்கத்தினால் ஏற்கனவே 30,010 பட்டதாரி இளைஞர்களுக்கு வேலை வாய்ப்பு அளிக்கப்பட்டுள்ளது. விரைவில் 10,407 பட்டதாரி இளைஞர்களுக்கு வேலை வாய்ப்பளிக்கப் படும்.இந்த நாட்டின் இளைஞர் மேம்பாட்டுக்காக அயராது பாடுபட்டு வருகிறார் மகிந்த ராஜபக்ஷ. குறிப்பாக 1980கள் மற்றும் 1990 களில் இந்த நாட்டின் அப்பாவி இளைஞர்கள் கொல்லப் பட்டபோது அவர்களுக்காக குரல் கொடுத்தவர் மகிந்த ராஜபக்ஷ.

அரச நிறுவனங்களான மின்சார சபை, மக்கள் வங்கி, துறைமுக நிர்வாகம் உள்ளிட்ட 12 துறைகள் தொடர்பான தனது கொள்கைகள் என்ன என்பதை ஐக்கிய தேசியக் கட்சி வேட்பாளர் ரணில் விக்கிரம சிங்க வெளிப்படுத்த வேண்டும். இந்த நிறுவனங்களை தனியார் மயமாக்கலுக்கு உட்படுத்தாமல் மறுசீரமைப்புப் பணிகளை மேற்கொள்வோம் என்று மகிந்த ராஜபக்ஷ அறிவித்துள்ளார்.

நாட்டின் தனியார் ஊடகங்கள் பக்கசார்புடன் நடந்து கொள்கின்றன. ஐக்கிய தேசியக் கட்சியையே அவை ஆதரிக்கின்றன. தனியார் வானொலி ஒன்றில் ஐக்கிய தேசியக்கட்சிக்கு 32 நிமிடங்கள் ஒதுக்கப்பட்டன. ஆனால் மகிந்த ராஜபக்ஷவுக்கு ஒன்பது நிமிடங்கள் தான் ஒதுக்கீடு செய்யப்பட்டன. மற்றொரு வானொலி நிர்வாகமும் 22நிமிடங்களை ரணிலுக்கும் 16 நிமிடங்களை மகிந்தவுக்கும் ஒதுக்கியது. தனியார் தொலைக்காட்சி ஒன்றும் 46 நிமிடங்களை ரணிலுக்கும் 33 நிமிடங்களை மட்டும் மகிந்தவுக்கும் அளித்தது.

அரச மற்றும் தனியார் ஊடகங்களின் தேர்தல் பிரச்சார பணிகளை கண்காணிப்பதற்கான குழுவை தேர்தல் திணைக்களம் அமைக்க வேண்டும் என்றார்அவர்.

## சுனாமி பொதுக்கட்டமைப்பிற்கு குறைந்தளவு எதிர்ப்பே இருந்ததாம்

### - அமெரிக்காவில் சந்திரிகா தெரிவிப்பு

சுனாமி பொதுக்கட்டமைப்பிற்கு குறைந்த அளவிலான எதிர்ப்பே இருந்ததாக சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தெரிவித்துள்ளார்.இந்தக் கட்டமைப்புக்கு தீவிர போக்குடைய சிலரே எதிர்ப்புத் தெரிவித்திருந்தாகவும் சனாதிபதி சுட்டிக்காட்டியுள்ளார்.அமெரிக்காவின் வோஷிங்டன் நகரில் நடைபெற்ற சுனாமி புனரமைப்பு நடவடிக்கை தொடர்பான சர்வதேச அமைப்பாளர்கள் மத்தியில் உரையாற்றுகைலேயே சனாதிபதி இதனைத் தெரிவித்திருக்கிறார். சமாதான ஒப்பந்தத்தின் ஊடாக சுனாமிக்குப் பின்னரான முகாமைத்துவக் கட்டமைப்பின் ஊடாக செயறப்பட தமிழீழ விடுதலைப்புலிகள் தீர்மானித்திருந்தாகத் தெரிவித்த சனாதிபதி நீதிமன்றத்தின் தீர்ப்பினால் சுனாமிக்குப் பின்னரான முகாமைத்துவக் கட்டமைப்பு செயல் இழந்திருப்பது கவலைக்குரியது என்றும் கூறியுள்ளார். இணக்கப்பாட்டுடன் முன்னேறிச் செல்லவிருந்த ஒரு நல்ல சந்தர்ப்பம் இதனால் கைநழுவிப் போய்விட்டதாக சனாதிபதி தெரிவித்திருக்கிறார்.

## மேல்கொத்மலை போராட்டம்; சுவரொட்டி ஒட்டியோர் கைது

(கொழும்பு)

மேல் கொத்மலை தொடர்பில் சுவரொட்டிகளை ஒட்டியவேளையில் கைது செய்யப்பட்ட ஐந்து பேரையும் எதிர்வரும் 27 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்க நுவரெலிய பதில் நீதவான் உத்தரவிட்டுள்ளார். இவர்கள் ஐவரும் நேற்று முன் தினம் இரவு பத்தனை பொலிசாரால் கைது செய்யப்பட்டனர்.இதன் பின்னர் இன்று காலை நீதவான் ராமராஜன் முன்னிலையில் ஆஜர் செய்யப்பட்டனர். இதேவேளை மேல் கொத்மலை திட்டத்திற்கு எதிரான எதிர்ப்பு மாநாடு இன்று தலவாக்கலை கதிரேசன் மண்டபத்தில் திட்டமிட்டபடி நடைபெறும் என மேல் கொத்மலை திட்டத்திற்கு எதிரான அமைப்பின் தேசிய அமைப்பாளர் டி தம்பையா அறிவித்துள்ளார் அவசரகாலச் சட்டம் அமுலில் உள்ள போதும் தமது எதிர்ப்புக் கூட்டம் நடைபெறும் என அவர் குறிப்பிட்டார்.தமது போராட்டம் எதிர்வரும் இரண்டாம் திகதி வரையும் தொடரும் என்றும் அவர் தெரிவித்தார். (32)

## முன்னாள் இராணுவச்சிப்பாய் பொலிசாரால் சுட்டுக்கொலை

கைது செய்யப்பட்ட வேளையில் தப்பிசெல்ல முயன்ற ஒருவர் சுட்டுக்கொல்லப்பட்டார்.இரத்தினபுரி நிவித்திக்லை பகுதியில் இந்த சம்பவம் நேற்று இடம்பெற்றுள்ளது. மாணிக்கக் கல் வியாபாரி ஒருவரின் வீட்டில் கொள்ளை மற்றும் பொலிசார் இருவரின் கொலை ஆகியவை தொடர்பில் ஏற்கனவே கைது செய்யப்பட்டவரே சுட்டுக் கொல்லப்பட்டார்.இவர் இராணுவத்திலிருந்து தப்பிச்சென்றவர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (32)

## மாகாண சபை அமைச்சர்கள் பெற்ற கடனை மீளச் செலுத்தவில்லை

மத்திய மாகாண சபையின் அமைச்சர்கள், உறுப்பினர்கள் பெற்ற சுமார் இரண்டு கோடி 45 இல்ட்சம் கடன் மீளச் செலுத்தப்படாமல் இருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது. இந்தக் கடன் தொகையை அறவிட நடவடிக்கை எடுத்துள்ளதாக மத்திய மாகாண முதல்வர் சரத் ஏக்கநாயக்க தெரிவித்தார். இதற்கான ஆலோசனைகள் அதிகாரிகளுக்கு வழங்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார். இந்தக் கடன் மாகாண சபை உறுப்பினர்களுக்குத் தேவையான பொருட்களைக் கொள்வனவு செய்வதற்காகவே வழங்கப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார் இந்தக் கடனைப் பெற்றவர்கள் குறிப்பாக தேர்தலில் தோற்று வெளியேறி உள்ளதால் கடனை மீளப் பெறுவதில் சிக்கல்கள் காணப்படுவதாகவும் முதலமைச்சர் தெரிவித்துள்ளார்.

(32)

# சுவிசில் இன்று மாவீரர்கள் எழுச்சி நிகழ்வு; "போரும் சமாதானமும்" நூல் வெளியீடு

தமிழீழத் தயாகத்தின் பெரு விருட்ச விதைகளாய் களமாடி விதையான மாவீர்களை நினைவு சுமக்கும் எழுச்சி விழா, சுவிசில் இன்று நடைபெறவுள்ளது.

இது குறித்து தமிழீழ விடுதலைப் புலிகளின் சுவிஸ் கிளை வெளியிட்டுள்ள அறிக்கையில்:

சிறிலங்கா-இந்திய அரசுகளின் கூட்டுச் சதிக்குப்பலியான லெப். கேணல் குமரப்பா, லெப்.கேணல் புலேந்திரன் உட்பட 12 வேங்கைகள் இந்திய வல்லாதிக்கத்துக்கு எதிராக அகிம்சைப் போர் புரிந்து விதையான லெப்.கேணல் திலீபன்,முதல் களப் பலியான பெண்போராளி இரண்டாவது லெப்.மாலதி,மூத்த உறுப்பினர் கேணல் சங்கர், சிறிலங்கா அரசின் சதியில் பலியான லெப். கேணல் நாதன், கப்டன் கஜன் ஆகிய மாவீரர்களின் நினைவை நெஞ்சில் சுமக்கும் நிகழ்வு சுவிசில் இன்று நடைபெறவுள்ளது. இந்த எழுச்சி விழாநடைபெறும் மண்டபத்தில் விடுதலைப்புலிகளின் வீரம் செறிந்த போராட்ட வரலாற்றை விளக்கிக்கூறும்அரசியல்ஆலோசகர் அன்ரன் பாலசிங்கத்தின் 'போரும் சமாதானமும்' அரசியல்வரலாற்று நூல் வெளியீட்டுவிழாவும் நடைபெறவுள்ளது என்றுஅதில்தெரிவிக்கப் பட்டுள்ளது.

# தமிழ்தேசியப் போருக்கான அறைகூவல்

## கிளி.கூட்டுறவாளருடன் கலந்துரையாடல்

(அலுவலகசெய்தியாளர்)

கிளிநொச்சி பிரதேச கூட்டுறவாளர்களுடனான தமிழ் தேசிய போருக்கான அறைகூவல் கலந்துரையாடல் நேற்று பகல் 10.00 மணிக்கு கிளிநொச்சி பண்பாட்டு மண்டபத்தில் நடைபெற்றது.

கிளிநொச்சி மாவட்ட அரசியல் துறைப்பொறுப்பாளர் கலைவாணன் தலைமையில் நடைபெற்ற மேற்படி நிகழ்வில் தமிழீழ நிர்வாக சேவைப் பொறுப்பாளர் பூவண்ணன், திருமலை மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் எழிலன், கிளிநொச்சி மாவட்ட தேசிய எழுச்சிப்பேரவைச் செயலர். சு.பசுபதிப்பிள்ளை ஆகியோர் கலந்து கொண்டு கருத்துரைவழங்கினர்.

மேற்படி கலந்துரையாடலில் கிளிநொச்சிப் பிரதேச கூட்டுறவுச் சங்கங்களின் தலைவர்கள், நிர்வாக உறுப்பினர்கள், பொது முகாமையாளர்கள்,சங்கப்பணியாளர்கள் பெருமளவில் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது. (சோ)

### மன்னார்...

தங்களை தாங்களே தயார் படுத்திக் கொள்ள வேண்டும் என்பதற்காக முதற் கட்டமாக ஆயுதப் பயிற்சி வழங்கப்பட்டுள்ளது,

நேற்று மன்னார் வட்டக்கண்டல் பிரதேச அரசியல்துறை செயலகத்தில் வைத்து மன்னார் மாவட்ட மாணவர் அமைப்பு பொறுப்பாளர் வேங்கை தலைமையில் மேற்படி நிகழ்வு இடம்பெற்றது.

இந் நிகழ்வில் ஆரம்ப நிகழ்வாக திலீபனின் திருவுருவப்படத்திற்கான ஈகச் சுடர் ஏற்றப்பட்டது. ஈகச் சுடரினை பாராளுமன்ற உறுப்பினர்கள் ஏற்றி வைக்க, தமிழீழத் தேசியக்கொடியினை மன்னார் மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் இனியவன் ஏற்றி வைத்தார். திலீபனின் திருவுருவப்படத்திற்கான மலரஞ்சலி நிகழ்வுகளைத் தொடர்ந்து மக்களுக்கான கருத்தரங் குகள் மன்னார் நகர் பொறுப்பாளர் முடியரசன் தலைமையில் இடம் பெற்றது.

கருத்தரங்குகளைத் தொடர்ந்து மாலை 4.00 மணியளவில் மக்களுக்கான ஆயுதப் பயிற்சி இடம்பெற்றது. இதில் நூற்றுக்கு மேற்பட்டவர்கள் கலந்து கொண்டார்கள். இவர்கள் இராணுவக் கட்டுப்பாட்டுப் பிரதேசங்களில் இருந்து வந்தவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது. (தீ)

### வடமராட்சியில்...

படையினர் இந்த கடற்கரைக் காப்பு தற்காப்பு தாக்குதல் ஒத்திகையில் கலந்துகொண்டனர்.

கடற்புலிகள் தளபதிகளில் ஒருவரான விநாயகம், வடமராட்சி கிழக்கு கடற்புலிகள் அரசியல் துறைப் பொறுப்பாளர் நிலவன், கடற்புலிகள் மகளிர் அரசியல்துறைப் பொறுப்பாளர் பூரணி ஆகியோர் இந் நிகழ்வில் கலந்து கொண்டனர்.

இதுவரை அறுநூறுக்கும் மேற்பட்ட யாழ். மாவட்ட மக்கள் கடற்படைத்துணைப்படை பயிற்சி பெற்றுள்ளனர்.

### சுனாமி...

மேற் கொள்ளப்பட்ட ஒழுங்கற்ற அனுமதி முறைகள், கட்டுமாணப் பணிகளுக்கான பொருட்கள் திருடப்பட்டுள்ளமை உள்ளிட்டவை அந்த அறிக்கையில் அம்பலப்படுத்தப்பட்டுள்ளது.

அரசாங்க, அமைச்சகங்கள், துறைகள், மாகாண சபை மற்றும் உள்ளூர் நிர்வாக அதிகாரிகள், மக்கள் தரப்பினர் ஆகியோரிடமிருந்து இந்தத் தகவல்களை பெற்றுள்ளதாக தணிக்கைத் துறை தெரிவித்துள்ளது.

சர்வதேச நிதியாக கிடைத்தது மொத்தம் 1168.8 மில்லியன் அமெரிக்க டொலர். இதில் 158.34 மில்லியன் அமெரிக்க டொலர் மட்டுமே பயன்படுத்தப்பட்டுள்ளது.

மீன் வளத்துறைக்கு 8.2 விழுக்காடும் குடிநீர் மற்றும் கழிப்பிட வசதிகளுக்கு 12.3 விழுக்காடும். வீட்டமைப்பு மற்றும் நகர மேம்பாட்டுக்கு 11.2 விழுக்காடும் வாழ்வாதாரங்களுக்கு 24.5 விழுக்காடும், சுகாதாரத்திற்கு 13.7 விழுக்காடும், கல்விக்கு 12.8 விழுக்காடுமாக இந்தத் தொகை செலவிடப் பட்டுள்ளது.

ஓகஸ்ட் 17 ஆம் திகதி உள்நாட்டில் திரட்டப்பட்ட மொத்த நிதி ரூ.4,277,999,499 இதில் ரூ, 1,576, 318, 448மட்டும் (37விழுக்காடு) செலவிடப்பட்டுள்ளது.

இந்தத் தொகை திரட்டப்பட்டதற்கான எதுவித முறையான கணக்குகளையும் அரசாங்கம் வைத்திருக்கவில்லை. இந்தத் தொகையின் பெரும் பகுதி பயன்படுத்தப்படாமல் அரசாங்கம் வைப்புத் தொகையில் வைக்கப்பட்டுள்ளது.

அமைச்சர்கள், அரசாங்க துறைகள், அரச நிறுவனங்கள் திரட்டிய ஆழிப்பேரலை நிதிக்கு முறையான கணக்குகள் எதுவும் இல்லை.

இவ்வளவு நிதி திரட்டப்பட்டும் தேசிய பேரிடர் மேலாண்மை சபை அல்லது பேரிடர் மேலாண்மை மையம் அமைக்க ஒரு நடவடிக்கையையும் அரசாங்கம் மேற்கொள்ளவில்லை.

384 அரச சார்பற்ற நிறுவனங்கள் மீளமைப்புப் பணிகளுக்காக 1,321 மில்லியன் அமெரிக்க டொலர் அளவிலான நிதி திரட்டப்பட ஒப்புக் கொண்டன.

ஆனால் அரசாங்கத்திற்கும், அரச சார்பற்ற நிறுவனங்களுக்குமான புரிந்துணர்வு ஒப்பந்தம் கையெழுத்தாகாததால் மீளமைப்புப் பணிகள் தொடங்கப்படவே இல்லை. அப்படி புரிந்துணர்வு ஒப்பந்தம் கையெழுத்தாகிய அரச சார்பற்ற நிறுவனங்கள் கூட பணிகளைத் தொடங்கவில்லை.

கல்முனை பிரதேசத்திற்கு அனுப்பி வைக்கப்பட்ட ரூ.1,010,950 மதிப்பிலான உதவிப் பொருட்கள் காணாமல் போயின.

65 மீன் பிறப்பாக்கிகள், 78 நீர்த்தாங்கிகள், 88 முகாம் கூரைகள், நீரிறைக்கும் இயந்திரம் உள்ளிட்டவையும் கல்முனை பிரதேசத்தில் காணாமல் போயிருக்கின்றன.

மேலும் அம்பாறை மாவட்டத்தில் ரூ.1,350,000மதிப்பிலான கூப்பன் அனுமதியும் கூடத் தகுதியற்ற தனிநபர்களுக்கு அளிக்கப்பட்டுள்ளது.

பண்டாரநாயக்க விமான நிலையத்தில் ஆழிப்பேரலை நடந்த நாளிலிருந்து இரண்டு நாட்கள் வரை வந்திறங்கிய பொருட்கள் தொடர்பாக சுங்கத்துறையினர் எதுவித முறையான ஆவணங்களையும் வைத்திருக்கவில்லை.

அரச சார்பற்ற நிறுவனங்களுக்கு 686 [illegible] கலன்களில் அனுப்பி வைக்கப்பட்ட உதவிப் பொருட்கள் கொழும்பு துறைமுகத்தில் கைவிடப்பட்ட நிலையில் உள்ளன.

அரசாங்கத்தின் மீளமைப்பு மற்றும் புனரமைப்பு அமைச்சகம் மற்றும் சமூக நலத்துறையில் இத்தகைய உதவிப் பொருட்களை சேமித்து வைப்பதற்கான சேமிப்புக் கிடங்கு வசதிகள் எதுவும் இல்லை. இதனால் உதவிப்பொருட்களை விநியோகிப்பதில் காலதாமதம் ஏற்பட்டது.

ஆழிப்பேரலை பணிகளுக்காக 506 வாகனங்கள், வெளிநாட்டிலிருந்து இறக்குமதி செய்யப்பட்டன. இவற்றில் 207 அரசாங்கப் பணிகளுக்கும்,209 அரச சார்பற்ற நிறுவனங்களுக்கும் ஒன்பது இதர நிறுவனங்களுக்கும் அளிக்கப் பட்டுள்ளன. இதை இறக்குமதி செய்ததிலும் சட்ட ரீதியான பிரச்சினைகள் உள்ளன.

ஆழிப்பேரலையில் சேதமடைந்த வீடுகளின் எண்ணிக்கை 48,974 இதில் 1055 வீடுகள் மட்டுமே (அதாவது இரண்டு விழுக்காடு ஓகஸ்ட் நான்காம் திகதி வரை மீளக்கட்டமைக்கப்பட்டுள்ளன. ஆனால் 71 விழுக்காடு வீடுகள் மீளக் கட்டமைப்புக்காக ஒப்பந்தம் செய்யப் பட்டுள்ளது.

அதே போல் வீடு திருத்தங்களுக்காக கொடுக்கப்பட்டிருக்கும் நிதியும் உரிய சேத மதிப்பீட்டு விபரங்கள் இல்லாமல் அளிக்கப்பட்டிருப்பதால் அரசுக்கு பாரிய செலவு ஏற்பட்டுள்ளது.

ஆழிப்பேரலையால் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு மாதம் தோறும் வழங்கப்பட்ட ரூபா. 5 ஆயிரம் திட்டத்திலும், பாரிய மாற்றங்கள் செய்யப்பட்டுள்ளன என்று அந்த அறிக்கையில் குறிப்பிடப் பட்டுள்ளது.

# சனாதிபதித் தேர்தலுக்கு முன் வரவு-செலவுத் திட்டம்

## ஐ.தே.க.கடும் நடவடிக்கை எடுக்கும்

சிறிலங்கா சனாதிபதித் தேர்தல் நடைபெறுவதற்கு ஒரு வார காலம் இருக்கையில் வரவு-செலவுத் திட்டத்தை பாராளுமன்றத்திற்கு கொண்டு வந்து தேர்தல் வாக்குறுதிகளை வழங்குவதற்கு அரசாங்கம் எடுக்கும் முயற்சிக்கு எதிராக நாட்டிற்குள்ளும் பாராளுமன்றத்திற்குள்ளும் கடும் நடவடிக்கைகளை எடுக்கவுள்ளதாக ஐக்கிய தேசியக் கட்சி தெரிவித்துள்ளது.ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் இரண்டாவது வரவு செலவுத் திட்டத்தை நவம்பர் மாதம் 08 ஆம் திகதி பாராளுமன்றத்திற்கு கொண்டு வர அரசாங்கம் திட்டமிட்டுள்ளது.

சனாதிபதித்தேர்தலுக்கு ஒருவாரம் இருக்கையில் பல வாக்குறுதிகளுடன் இந்தவரவு-செலவுத்திட்டத்தை பாராளுமன்றத்திற்கு கொண்டு வர அரசாங்கம் திட்டமிட்டுள்ளதாகவும், அதற்கெதிராக கடும் நடவடிக்கை எடுக்கவுள்ளதாகவும், ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதிப் பொதுச் செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்க தெரிவித்தார்.

# மணலாற்றில் தேர்தல் பரப்புரைக்கு

## ரணில் இன்று வருகின்றார்

(நமது நிருபர்)

சனாதிபதித் தேர்தல் பரப்புரைகளுக்காக சிறிலங்காவின் எதிர்க் கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க இன்று மணலாற்றுப் பகுதிக்கு விஜயம் செய்கின்றார்.

முல்லைத்தீவு-திருகோணமலை மாவட்டங்களின் எல்லைப் புறங்களில் இருந்த பூர்வீக வாசிகளான தமிழ் மக்கள் இராணுவத்தினரால் விரட்டப்பட்ட பின்னர் மணலாற்றுப் பகுதியில் வெலி ஓயா என்ற பெயரில் சிங்களக் குடியேற்றங்கள் ஏற்படுத்தப் பட்டுள்ளன.

இப்பகுதி தற்போது அநுராதபுரம் மாவட்டத்தின்நிர்வாகப் பகுதிக்குள் அடங்குகின்றது. சுனாமியின் பின்னர் இலங்கையின் முதல் முதலாகப் பாதிக்கப்பட்டோருக்கு வீடுகள் அமைத்துக் கொடுக்கப்பட்டது இங்கேதான். இவ்வாறு இக்குடியேற்ற வாசிகளின் விடயத்தில் அரசு மிகவும் அக்கறையுடன்செயற்படுகிறது. அரச வளங்களும் பூரணமாக இவர்களுக்குக் கிடைக்கிறது.

இக்குடியேற்ற வாசிகளான சிங்களவர்களிடையே வாக்குச் சேகரிக்கும் நோக்குடனேயே ரணில் விக்கிரமசிங்க இப்பகுதிக்கு விஜயம் செய்கிறார் என்பது குறிப்பிடத்தக்கது

# நேர்முகத்தேர்வு பிற்போடல்

முல்லைத்தீவு வலயக்கல்விப் பணிமனையில் 27.09.2005 தொடக்கம் 29.09.2005வரை நடைபெற இருந்த தொண்டர் ஆசிரியர்களுக்கான நேர்முகத் தேர்வு பிற்போடப்பட்டுள்ளது. நேர்முகத் தேர்வு நடைபெறும் திகதி பின்னர் அறிவிக்கப்படும் என முல்லை வலயக்கல்விப்பணிப்பாளர் ப.அரியரத்தினம் அறியத்தந்துள்ளார். (20)

# வடகிழக்கு பிரச்சினைக்குத்தீர்வுகாண இரு பிரதான கட்சிகளும் இணையவேண்டும்

## -அநுராதபுர கூட்டத்தில் ரணில்தெரிவிப்பு

வடகிழக்கு பிரச்சினைக்கு தீர்வுகாண இரண்டு பிரதான கட்சிகளும் இணைந்து செயற்பட வேண்டுமென எதிர்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார். நாட்டின் இனப்பிரச்சினைகுறித்து இருபிரதான கட்சிகளும் ஒரு நிலைப்பாட்டில் இருந்து தமிழீழ விடுதலைப் புலிகளுடன் பேச்சுவார்த்தை நடத்தவேண்டும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார். எதிர்வரும் சனாதிபதித் தேர்தலில் தான் வெற்றி பெற்ற பின்னர் விடுதலைப் புலிகள் மற்றும் சிறிலங்காசுதந்திர கட்சியுடன் பேச்சுவார்த்தை நடத்தவுள்ளதாகவும் அவர் தெரிவித்தார். அநுராதபுரத்தில் நேற்றுமுன்தினம் நடைப்பெற்ற கூட்டத்தில் உரையாற்றும்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்; சமாதான முன்னெடுப்புகளின்போது இராணுவத்தை கலைத்து விடும் எண்ணம் எமக்கு இல்லை இந் நாட்டை பாதுகாக்கவும் சமாதானத் திற்காகவும் இராணுவத்தினரின் சேவை அவசியமானதாகும் எனக் குறிப்பிட்டார்.ஜே.வி. பியின் தலைவர் சோமவன்ச அமரசிங்க கொழும்பு நகர சபை மைதானத்தில் வைத்து இராணுவத்தினர் நாட்டின் எல்லைகளைப் பாதுகாக்க முடியாவிட்டால் இராணுவத்தைக் கலைத்து விடுமாறு கோரியமைக்கு பதில் அளிக்கும் வகையிலேயே இந்த கருத்தை ரணில் விக்கிரமசிங்க வெளியிட்டார்.நாட்டின் உள்ளூராட்சி மன்றங்களுக்கு கூடிய அதிகாரங்கள் வழங்கப்படவுள்ளதாக தெரிவித்த அவர் முன்னாள் அமைச்சர் சிறிசேனாரெக்கு மேல் மாகாண ஆளுநர் பதவி வழங்கப்படவுள்ளதாகவும் குறிப்பிட்டார். (32)

### மன்னார் தேசிய...

அணி திரட்டுவதற்கான செயற்பாடுகளை முன்னெடுத்து வருகின்றது.

கிராம மட்டத்தில் உள்ள அனைத்து பொது அமைப்புக்களையும், ஒன்று திரட்டி அவர்களுக்கான கருத்துரைகளை வழங்கி அவர்கள் உணர்வுகளின் வெளிப்பாடுகளை வீடுத்தரிசிப்புக்கள், பொது அமைப்புக்களை எவ்வாறு உள்வாங்க வேண்டும் என்று திட்டமிட்டு உணர்வு பூர்வமாக கலந்து கொள்ளவுள்ளார்கள்.

இந் நிகழ்வுக்கான போக்குவரத்து வசதிகளை அந்தத் செயலணிக் குழுக்களினூடாக அந்த பகுதிகளுக்கு வாகனங்கள் குறிப்பிட்ட நேர ஒழுங்கின் படி அனுப்பி வைக்கப்படும் என செயலணிக்குழு வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

### மட்டக்களப்பில்...

கொல்லப்பட்டவர் இருதயபுரத்தைச் சேர்ந்த வேலு கிசோக்குமார் (வயது-25 என அடையாளங் காணப் பட்டுள்ளார்.

கண்டியைப் பிறப்பிடமாகக் கொண்ட இவர் பத்து வருடங்களாக இருதயபுரத்தில் வசித்து வந்தவர். அத்துடன் காரத்தே,ஜிம்னாஸ்டிக் கலைகளில் நன்கு பயிற்றப்பட்டவர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

இப் பத்திரிகை ஈழநாதம் பணிமனையில் 2005 ஆம் ஆண்டு செப்ரெம்பர் 25 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.